පළාත් සභා හා පළාත් පාලන කටයුතු පිලිබඳ රාජ්‍ය අමාත්‍යාංශය

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு

State Ministry of Provincial Councils & Local Government Affairs

පළාත් පාලනය පිලිබඳ ශ්‍රී ලංකා ආයතනය

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம்

SRI LANKA INSTITUTE OF LOCAL GOVERNANCE

වාර්ෂික වාර්තාව 2019

ஆண்டறிக்கை 2019

ANNUAL REPORT 2019

අංක. 17, මලලසේකර මාවත,
කොළඹ 07

இலக்கம் 17, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07

No. 17, Malalasekara Mawatha,
Colombo 07.

உள்ளடக்கம்

பக்க இல.

அத்தியாயம் 01 - அறிமுகம்

1.2 நோக்கு

1.3 செயற்பணி

1.4 நிறுவகத்தின் தத்துவ ரீதியான அதிகாரங்கள்

1.5 பிரதான துறைகள்

1.6 நிருவாக சபையின் செய்தி

1.7 குறிக்கோள்கள்

1.8 முகாமைத்துவ ஒழுங்கமைப்பு

அத்தியாகம் 02 – ஒழுங்கமைப்பு

2.2 இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் பற்றிய அறிமுகம்

2.3 நிறுவகத்தின் நிருவாகக் கூற்று

2.3 நிருவாக சபை உறுப்பினர்கள்

2.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள்

அத்தியாகம் 03 - மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாற்றுகையை மேம்பாடுத்துவது தொடர்பிலான நிறுவகத்தின் செயற்பணிசார் தத்துவ அதிகாரம் பற்றிய மீளாய்வு

3.1. நிறுவகத்தின் மதியுரைச் சேவைகள்

3.2. இலக்குக் குழு

3.3. ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு

3.4. வியாபார மேம்படுத்தல் நடவடிக்கைகள்

3.5. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான பயிற்சி மற்றும் கல்விசார் நிறுவகங்களுடனான உறவுகள்

3.6. விசேட நிகழ்வுகள்

அத்தியாயம் 04 – 2019 ஆம் ஆண்டுக்கான நிறுவகத்தின் ஒட்டுமொத்த செயலாற்றுகை

4.1. நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்கள் பறறிய பொழிப்புரை

4.2 இலக்குசார் மற்றும் உண்மையான பயனாளிகள்

4.3 வரவு செலவுத்திட்ட ஒதுக்கம் மற்றும் சகல பிரிவுகளினதும் உண்மையான செலவினம்

4.4 திறைசேரி நிதியங்களின் நிதிசார் பயன்பாடு பற்றிய ஒப்பீடு

4.5 கடந்த சில ஆண்டுகளுக்கான இலாபம் / நட்டம்

4.6 நிறுவகத்தின் ஒவ்வொரு பிரிவினதும் செயலாற்றுகை பற்றிய தகவல்கள்

4.7 இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் மேற்கொள்ளும் பொறுப்பளிக்கப்பட்டவை/ கருத்திட்டங்கள் / மதியுரைச் சேவைகள்

அத்தியாயம் 05 – 2019 இன் நிதிசார் தகவல்கள்

5.1. கணக்காய்வுக் கருத்துரை

5.2. அ) நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

ஆ) நிதி நிலைமை பற்றிய கூற்று

இ) திரண்ட காசோட்டம் பற்றிய கூற்று

ஈ) தேறிய சொத்து மாற்றம் பற்றிய கூற்று
உ) கணக்கீட்டுக் குறிப்புகள்

அத்தியாயம் 06 - முடிவு

1.0. அறிமுகம்

நாட்டின் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாற்றுகையை வளர்ப்பதற்கான எதிர்கால நோக்கு அவசியமாக இருந்த சூழலில் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் உருவாக்கப்பட்டது. இந்த நோக்கை யதார்த்தமாக மாற்றியமைத்துக் கொள்வதற்காக அது பற்றி ஆராய்ந்து சிபார்சுகளைச் சமர்ப்பிக்கும் பொருட்டு 1997 ஆம் ஆண்டில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. நாட்டின் உள்ளூராட்சித் துறையின் செயலாற்றுகையை வளர்க்கும் தேவைப்பாட்டுக்கான செயற்பணியை நிறைவேற்றுவதற்காக புதிய நிருவனம் ஒன்றை உருவாக்குவதன் முக்கியத்துவம் இந்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் வலியுறுத்தப்பட்டது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக மக்கள் எதிர்பார்க்கின்ற வகையில் வினைத்திறனும், திருப்திகரமானதுமான சேவையை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கக் கூடிய மட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் நேரடியாக பங்களிப்புச் செய்யக்கூடிய சுயஅதிகாரம் கொண்ட சுயாதீனப் பிரிவொன்றாக உள்ளூராட்சி மன்றங்கள் கவனத்திற்கொள்ளப்படல் வேண்டுமென ஜனாதிபதி ஆணைக்குழு வலியுறுத்தியது. இந்த அபிப்பிராயங்களை அடைந்துகொள்வதற்குப் பொருத்தமான நிறுவனமாக இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் இருக்குமெனக் கருதப்பட்டது. பொதுமக்களுக்கு நெருக்கமான ஜனநாயக நிறுவனம் என்றவகையில், மக்களின் பிரதிநிதித்துவ நிறுவனமாக செயற்படும் ஆற்றலைக் கொண்டுள்ள பண்புகள் இந்த நிறுவனத்திற்கு உரித்தானதாகவுள்ளன. இந்த அபிப்பிராயங்களுக்கமைய செயற்பட்டு 1999 இன் 31 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் தாபிக்கப்பட்டது. அதே ஆண்டு ஒக்டோபர் மாதம் அதன் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

1.1. நோக்கு

"சமுதாயத்திற்கு உயர் தரம்மிக்க சேவையைப் பெற்றுக் கொடுப்பதை உறுதிசெய்கின்றதும், ஊக்கமும், வகைப்பொறுப்பும்மிக்க மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி முறை"

1.2. செயற்பணி

"மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் நிலைபேறான அபிவிருத்தி மற்றும் நல்லாட்சியை மேம்படுத்துவதற்கான ஆலோசனை, பயிற்சி மற்றும் ஆராய்ச்சியினூடாக மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்தல்"

1.3. நிறுவகத்தின் தத்துவ ரீதியான அதிகாரங்கள்

நிறுவகத்தின் உபாய முறையிலான திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான அரசதுறை நிறுவனம் என்றவகையில் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் தாபிக்கப்பட்டுள்ளது.

- நாட்டில் நல்லாட்சியை உறுதி செய்யும் நோக்கத்துடன், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் ஏனைய

பதவியணியினரைப் பயிற்றுவிப்பதற்கு வினைத்திறன் மிக்க பதவியணியினரை இந்த நிறுவனம் ஊடாக உருவாக்குதல்.

❖ மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஒழுங்கமைப்பு மற்றும் முகாமைத்துவ ஆற்றல்களை மேம்படுத்துவதற்கான ஆலோசனை சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

❖ மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் முகாமைத்துவக் கட்டமைப்பையும், செயற்பாடுகளையும் பகுப்பாய்வு ரீதியாக மதிப்பீடு செய்வதற்குத் தேவையான மேடையை பெற்றுக் கொடுத்தல்.

❖ முகாமைத்துவ அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி அலகுகளுக்கு உதவுதல்.

❖ உள்ளூராட்சி பற்றிய தேசிய கொள்கைகளைத் தயார் செய்வதற்குத் தேவையான தகவல்களை கௌரவ அமைச்சருக்குப் பெற்றுக்கொடுத்தல்.

❖ மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் பற்றிய நூல்கள் மற்றும் சஞ்சிகைகளை வெளியிடுவதற்கும், தகவல்களைப் பிரபல்யப்படுத்துவதற்குமான கருத்தரங்குகள், செயலமர்வுகளை நடாத்துவதற்கும், உள்நாட்டு வெளிநாட்டு இணையத்தளங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தல்.

1.4. முக்கிய துறைகள்



மதியுரை

பயிற்சி

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம்

ஆராய்ச்சி

தகவல்களை பரப்புதல்

1.5. நிருவாக சபையின் செய்தி

இருபது வருடங்களுக்கு முன்னர், அதாவது 1999 ஆம் ஆண்டில் இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் மற்றும் பதவியணியினரின் திறன் விருத்தி தொடர்பில் கவனம் செலுத்தி தெளிவான நோக்குடன் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் (SLILG) வடிவமைக்கப்பட்டது. இக்காலப்பகுதிக்குள் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் நாட்டினுள் மற்றும் நாட்டுக்கு வெளியே என்ற வகையில் உள்ளூராட்சித் துறைக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், நிறுவனத்தினுள் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள்

மற்றும் வெளிநாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் என்ற வகையில் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினுள் தாபிக்கப்பட்டுள்ள பொறியியல், சட்ட அலுவல்கள், பௌதீக திட்டமிடல், நிதி முகாமைத்துவம், பொது முகாமைத்துவமும், மனித வள முகாமைத்துவமும் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பயன்பாடு போன்ற பிரிவுகளினால் உள்ளூராட்சி தொடர்பிலான பரந்த விடயப்பரப்புக்கள் இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இச்செயற்பணிக்கு இசைவாக இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் பூரண பொருளாதார கட்டுப்பாட்டுக் கொள்கை, நிதிசார் மற்றும் சட்ட சிக்கல்கள் பற்றிய புள்ளிவிபரங்களின் அடிப்படையிலான பயிற்சி வாய்ப்புக்கள் 50,000 இற்கும் மேற்பட்ட அரச அலுவலர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. உலகம் முழுவதிலும் பரந்துள்ள அறிவை இப்பிராந்தியத்திற்குள் கொண்டு வருவதற்காக மற்றும் ஆசியப் பிராந்தியத்திற்கு ஏற்புடையதான விடயங்கள் மற்றும் வெற்றிகரமான தன்மை தொடர்பிலான விளக்கங்களை வலியுறுத்துவதற்கான விரிவுரைகள், செயலமர்வுகள் மற்றும் சம்பவக் கற்கைகளும் ஒழுங்கு செய்யப்படுகின்றன. இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் சம்பந்தப்பட்ட துறைகளுக்குரிய நடப்புவிவகார தலைப்புக்கள் பற்றிய கற்கைகள், ஆராய்ச்சிகள் மற்றும் மதியுரைச் சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகமானது, அதனூடாகப் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற பரந்தளவிலான சேவைகளின் ஊடாக தேவையான திறன் மற்றும் ஆற்றல்களை உருவாக்கும் வசதிகளைச் செய்துகொடுப்பதன் மூலம் தமது சேவை பெறுநர்கள் மத்தியில் குறித்ததொரு அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு மற்றும் அரச துறையினுள் உள்ளூராட்சித் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் பொருத்தமான தலையீடுகள் மற்றும் உபாயமுறைகள் பற்றித் தீர்மானம் செய்வதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொள்கின்றது. பிராந்திய அபிவிருத்தி துறையில் சகல மட்டங்களிலும் தொழில்சார் தன்மையை மேம்படுத்துவதற்கான முயற்சியில் சகல தரப்பினர்களினதும் முனைப்புடனான பங்களிப்பை நாம் எதிர்பார்க்கின்றோம். எமது வெற்றிகரமான தன்மை தொடர்பிலான ஒரே அளவுகோலாக இருப்பது உள்ளூராட்சி மன்றங்களின் வெற்றியாகும் என்பதுடன் மறுபுறம் இது மக்களின் வெற்றியில் தங்கியுள்ளது.

இந்த முயற்சிகளை மேற்கொள்ளும் போது, இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் எமது நாட்டின் தேவைகளுக்கான தமது நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைக்கின்ற இலக்குக்கு அமைய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. பிராந்திய நிபுணத்துவம் தொடர்பில் கவனம் செலுத்துவதும் எமது பிராந்திய பயிற்சிப் பங்கீடுபாட்டாளர்களுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் அறிவைப் பகிர்ந்துகொள்வதை நாம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றோம்.

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் ஆற்றப்பட்ட இருபது வருடகால சேவை தொடர்பில் நாம் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1.6. குறிக்கோல்கள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பணி பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படுகின்றது.

1. மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி அலகுகளுடன் இணைந்து பங்குடைமை அடிப்படையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களை நிறுவன ரீதியிலான ஆற்றலை மேம்படுத்துவதற்கான செயலாற்றுகைக்கு ஏற்புடையதாகின்ற நிகழச்சித்திட்டங்களை தயார் செய்தல்.
2. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாற்றுகையை வளர்ப்பதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்வதற்காக மற்றும் நடாத்துவதற்காக மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி அலகுகளை வலுவூட்டுவதும், அப்பணிகளில் பங்கேட்பதும்.
3. உள்ளூராட்சித் துறையின் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் வேறு தகவல்களைப் பெற்றுக் கொடுத்து உள்ளூராட்சி பற்றிய வள நிலையமாக செயற்படுதல்.
4. சம்பந்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதன் ஊடாக உள்ளூராட்சி தொடர்பான மைய நிறுவனமொன்றாக செயற்படுதல்.
5. மனித வள முகாமைத்தவத்தை மேம்படுத்தல், முகாமைத்துவக் கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும் நிறுவன ரீதியான மாற்றங்கள் போன்றன தொடர்பில் விசேடமான உதவிச் சேவைகளை உப தேசிய மட்டத்திலான அரச நிறுவனங்களுக்குப் பெற்றுக் கொடுத்தல்.
6. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களை வலுவூட்டுவதற்கான பயிற்சிகள், ஆராய்ச்சிகள் மற்றும் ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் செயலாற்றுகையை மேம்படுத்தல்.


இக்குறிக்கோல்களை நிறைவேற்றுவதற்காக இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் பின்வரும் பணிகளை மேற்கொள்கின்றது.

- தேசிய மட்டத்திலான / மாகாண மட்டத்திலான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் / செயலமர்வுகள்
- சர்வதேச / தேசிய கருத்தரங்குகள்
- செயன்முறை பயிற்சி அமர்வுகள்
  உதாரணமாக : (அ) துணைச் சட்டங்களைத் தயார் செய்தல்
  (ஆ) உள்ளூராட்சி மன்றங்களின் இறுதிக் கணக்குகளைத் தயார் செய்தல்
- டிப்ளோமா பாடநெறி :
  (அ) உள்ளூராட்சி பற்றிய டிப்ளோமா (தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கானது)
  (ஆ) உள்ளூராட்சி பற்றிய டிப்ளோமா (அலுவலர்களுக்கானது)

- **சான்றிதழ் பாடநெறி :**
  (அ) கருத்திட்ட முகாமைத்துவம் பற்றிய சான்றிதழ் பாடநெறி
  (ஆ) உள்ளூராட்சி மன்றங்களின் புலனாய்வு அலுவலர்களுக்கான சான்றிதழ் பாடநெறி
  (இ) கணினி அப்லிகேசன்ஸ் பற்றிய சான்றிதழ் பாடநெறி
  (ஈ) உள்ளூராட்சி பற்றிய சான்றிதழ் பாடநெறி (ஊவா மாகாணம்)
- ஆராய்ச்சிகள்

- மதியுரைச் சேவைகள்
- கையேடுகள் மற்றும் ஆவணங்களை வெளியிடுதல்
    - இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகமானது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை ‘‘உள்ளூராட்சி’’ எனும் வெளியீட்டை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும், வருடாந்தம் ‘Local Governance Journal’ (உள்ளூராட்சி ஜேர்னல்) ஐயும் வெளியிட்டு வருகின்றது.

1.7. இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் முகாமைத்துவ ஒழுங்கமைப்பு



***** முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலுக்கு அமைய இந்த முகாமைத்துவக் கட்டமைப்பு திருத்தியமைக்கப்படும்.*

1.8. தற்போது சேவையாற்றி வருகின்ற பதவியணி



இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் நடாத்தப்பட்ட பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை அடுத்து அதன் நிறுவன ஒழுங்கமைப்பானது தற்போது மீளமைக்கப்பட்டுள்ளது. மேலும், எமது பிரேரணையை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்க நாம் நடவடிக்கை மேற்கொண்டிருப்பதுடன், அது பற்றித் தொடர்ந்தும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எவ்வாறாயினும், உள்ளூராட்சி மன்றத்துறைக்கு மென்மேலும் வினைத்திறன்மிக்கதும், காத்திரமானதுமான சேவையை ஆற்றுவதை உறுதி செய்வதற்காக பதவியணியினரின் செயலாற்றுகை மற்றும் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளின் தரத்தை மேம்படுத்துவது அத்தியாவசியமானதாகும். எனவே, மென்மேலும் வினைத்திறன்மிக்கதும், காத்திரமானதுமான சேவை ஆற்றலை உறுதி செய்யும் நோக்கத்துடன், பதவியணியினரின் அறிவு மற்றும் புரிந்துணர்வை மேம்படுத்துவதற்காக இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகமானது பதவியணியின் அபிவிருத்திகான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்துள்ளது.

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் பதவியணிக்கு சுய திறன்களை விருத்தி செய்துகொள்வதற்கான வாய்ப்புக்களை மேம்படுத்திக் கொள்வதற்காக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான வெளிவாரிப் பயிற்சி வாய்ப்புக்கள் செய்துகொடுக்கப்படுகின்றன.

தற்போது நிறுவனத்திலுள்ள பதவியணியினரின் பெயரும், பதவிப் பெயரும் பின்வருமாறாகும்.

பெயர்	பெயர்	பதவி
01	திரு ஈ.எம்.டி.பி. ஏக்கநாயக்க	பணிப்பாளர் / பி.நி.அ.
02	திரு ஆர்.எம்.ஏ.கே. ரத்நாயக்க	மேலதிகப் பணிப்பாளர்
03	திரு பீ.எஸ். தர்மரத்ன	ஆலோசகர் (ஆராய்ச்சி)
04	திருமதி கே.ஏ.பீ.ஆர். காரியப்பெரும	பிரதிப் பணிப்பாளர் (பயிற்சி)
05	திரு பீ.ஏ.டி. ஹிரான் ரதீஷ	கணக்கீட்டு அலுவலர் / உதவிப் பணிப்பாளர் (நிதி) – பதில் கடமையாற்றல்
07	திருமதி எஸ்.ஏ.எஸ்.எஸ்.என். பெரேரா	சபை செயலாளர் மற்றும் பணிப்பாளர் / பி.நி.அலுவலரின் அந்தரங்க உதவியாளர்
08	திரு ஏ.ஈ. சமரரத்ன	நிருவாக அலுவலர்
09	திரு அஞ்ஜன தொடம்கொட	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர்
10	திருமதி எஸ்.என்.பீ. ரோசா	நிகழ்ச்சித்திட்ட அலுவலர்
11	திரு டி.எம். ஜகத் புஷ்பகுமார	நிகழ்ச்சித்திட்ட அலுவலர்
12	செல்வி எம்.டி.ஐ.டி. விஜேமான்ன	நிகழ்ச்சித்திட்ட அலுவலர்
13	திருமதி ஆர்.எம்.ஜி.கே. ரனசிங்க	நிகழ்ச்சித்திட்ட அலுவலர்
14	திருமதி ஏ.டி. வீரசேகர	நிகழ்ச்சித்திட்ட அலுவலர்
15	திருமதி ஜி.பி.எம்.எஸ்.பீ. பண்டார	நிகழ்ச்சித்திட்ட அலுவலர்
16	திரு சுரேஷ் குமார	நிகழ்ச்சித்திட்ட அலுவலர்
17	திருமி ஹேமா ரத்நாயக்க	முகாமைத்துவ உதவியாளர்
18	திருமதி ஓ.டபிள்யு.ரீ.பீ. ஓவிட்டிபன	முகாமைத்துவ உதவியாளர்
19	திருமி எச்.டி.எம். பிரியதர்ஷனீ	முகாமைத்துவ உதவியாளர்
20	திருமதி டி.எம்.ரீ. ரன்துனு	முகாமைத்துவ உதவியாளர்
21	திருமதி எம்.எஸ்.சீ. விமலவீர	முகாமைத்துவ உதவியாளர்
22	திருமதி ஏ.பீ. ரத்னஹேவா	முகாமைத்துவ உதவியாளர்
23	திரு பீ.ஜி.சீ.பி. கருணாரத்ன	சாரதி
24	திரு எல்.எஸ். சம்பத்	சாரதி
25	திரு என்.எச்.டி. துஷார	சாரதி
26	திரு ஆர்.ஆர்.பீ. டபிள்யு. சுஜத் பண்டார	சாரதி
27	திரு எல்.யு.எஸ். ஆரியசிங்க	சாரதி
28	திருமதி பீ.ஜி. டின்கிறி அம்மா	அலுவலக உதவியாளர்
29	திரு கே. கமல் கிறிஷாந்த	அலுவலக உதவியாளர்
30	திரு ஏ.ஏ.எச்.என். அதிகாரி	அலுவலக உதவியாளர்
31	திரு என்.எஸ்.டி. பெரேரா	அலுவலக உதவியாளர்

2.0. ஒழுங்கமைப்பு

2.1. இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் பற்றிய அறிமுகம்

பொது மக்களுக்கு வினைத்திறனும் திருப்திகரமுமான சேவையை நிறைவேற்றக்கூடிய வகையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் முகாமைத்துவத்தையும் நிறுவன ரீதியான செயலாற்றுகை மட்டங்களையும் வளர்ப்பது இந்த நிறுவகத்தின் அடிப்படை நோக்கமாகும். 1987 இன் 13 ஆம் இலக்க அரசியல் யாப்புத் திருத்தத்திற்கமைய, ஆட்சி அதிகாரங்களை பன்முகப்படுத்தும் முறைமை உருவானது. ஆட்சி அதிகாரத்தை கையளிக்கும் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கும் ஜனநாயக ரீதியான அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குமாக பொறுப்பளிக்கப்பட்ட அதிகாரத்தை முறையாக அமுல்படுத்துவது அத்தியவசியமான நிபந்தனையொன்றாகும். அதற்கமைய நிறுவன ரீதியான நிருவாகச் செயற்பணியொன்றை மாகாண சபை மட்டத்தில் தாபிக்க எதிர்பார்க்கப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்டவாறு இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் தாபிக்கப்பட்டு இதுவரை 21 வருடங்கள் கடந்துள்ளன. இந்தக் காலப்பகுதிக்குள் வருடாந்தம் அமுல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் அமுல்படுத்தப்பட்டு வருவதுடன் இதன் நிருவாக சபையின் வழிகாட்டலின் கீழ் நிறுவகத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை உற்பத்தித் திறன் மிக்கவாறு அடைந்து கொள்வதற்கான எண்ணக்கருக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் தமது எண்ணக்கரு ரீதியான இலக்குகள், நோக்கங்களை குறுங்காலத்தில் வெற்றிகரமாக அமுல்படுத்தும் பொருட்டு சர்வதேச உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் உள்நாட்டு பயிற்சி நிறுவனங்களின் பூரண ஒத்துழைப்பையும் பெற்றுள்ளது. இந்த நிறுவகத்தின் விசேட மதியுரைப் பணிக்கான சபையின் பல்வேறு பங்களிப்பு மற்றும் ஆராய்ச்சிப் பங்களிப்பு நிறுவகத்தின் உத்தேச நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பெரும் உதவியாக அமைந்துள்ளன.

எவ்வாறாயினும், பன்முகப்படுத்தும் வேலைத்திட்டம் குறிப்பாக அதனை அமுல்படுத்தும் பணிகளில் ஓரளவு தூரமாகியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக,

- பன்முகப்படுத்துவதன் பெறுபேறாக இடம்பெறக்கூடிய வினைத்திறன் மற்றும் சமூகத்தின் முன்னுரிமை மற்றும் துரிதமாக தீர்த்து வைக்கப்பட வேண்டிய சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கு வளங்களை பகிர்ந்தளிப்பதை உறுதிப்படுத்தல்.

- கொள்கைகளைத் தயார் செய்யும் போது பன்முகப்படுத்தலினூடாகக் கிடைக்கின்ற பயன்களை வளர்த்துக் கொள்ளும் ஆற்றல் மற்றும் இலக்குக் குழுக்களின் தேவைகளுக்காக கொள்கைகளை அமுல்படுத்தல்.

- வறுமையை குறைக்கும் போதும் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பன்முகப்படுத்தலின் மூலம் கிடைக்க வேண்டிய பயன்மிக்க நிலைமை.

- குறிப்பாக வறுமையினால் பாதிக்கப்படுகின்ற மக்கள் மற்றும் பிரசைகள் தொடர்பில் காட்டப்படுகின்ற முன்னுரிமையை வெளிப்படுத்தும் பொருட்டு இந்த மட்டங்களில் மேற்கொள்ளும் தீர்மானங்களை அமுல்படுத்தல்.

- கிராமிய மட்டத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக அவர்களின் பங்கேட்புடனான தீர்மானம் மேற்கொள்வதில் கவனம் செலுத்தல்.

2019 ஆம் ஆண்டின் நவம்பர் மாதமளவில் காணப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை 341 ஆகும். (மாநகர சபைகள் 24, நகர சபைகள் 41 மற்றும் பிரதேச சபைகள் 276 ஆகும்.) சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உறுப்பினர்கள் கலப்புத் தேர்தல் முறையின் கீழ் தெரிவு செய்யப்படுகின்றார்கள்.

மாகாணம்	மாவட்டம்	மாநகர சபைகளின் எண்ணிக்கை	நகர சபைகளின் எண்ணிக்கை	பிரதேச சபைகளின் எண்ணிக்கை	மொத்தம்
மேல்	கொழும்பு	06	05	03	14
	கம்பஹா	01	05	12	18
	களுத்துறை	00	04	13	17
வடமேல	குருநாகல்	01	01	19	21
	புத்தளம்	00	02	10	12
மத்திய	கண்டி	01	04	17	22
	மாத்தளை	02	00	11	13
	நுவரெலியா	01	02	09	12
சபறகமுவா	கேகாலை	00	01	11	12
	இரத்தினபுரி	01	02	14	17
ஊவா	பதுளை	02	01	15	18
	மொனராகலை	00	00	10	10
வடமத்தி	அநுராதபுரம்	01	00	17	18
	பொலன்னறுவை	01	00	07	08
தெற்கு	காலி	01	02	17	20
	மாத்தறை	01	01	15	17
	ஹம்பாந்தோட்டை	01	01	10	12
வடக்கு	யாழ்ப்பாணம்	01	03	14	18
	கிளிநொச்சி	00	00	03	03
	மன்னார்	00	01	04	05
	வவுனியா	00	01	04	05
	முல்லைத்தீவு	00	00	04	04
கிழக்கு	அம்பாறை	02	01	17	20
	திருகோணமலை	00	02	11	13
	மட்டக்களப்பு	01	02	09	12
மொத்தம்					**341**
2019 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை					***8570***

உள்ளூராட்சி மன்றங்கள் என்பது பொது மக்களுக்குப் பிரதேச ரீதியான சேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கினற் ஆரம்ப சேவை வழங்கும் நிறுவனமாக இருப்பதனால் தற்போதைய நல்லாட்சி அரசின் அர்ப்பணிப்புமிக்க கொள்கைகள் தொடர்பில் சிறந்த புரிந்துணர்வு மற்றும் விழிப்புணர்வுடன் தீர்மானம் மேற்கொள்வதும், வெளிப்படைத்தன்மை மற்றும் வகைப்பொறுப்புக்கூறுவதும் உறுப்பினர்களின் செயற்பணியாக இருக்கும்.

இவ்வாறு, ஒவ்வொரு வருடமும் இலக்காக இருக்க வேண்டியது உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகளினால் நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் இருக்கின்ற மாகாண மட்டத்திலான சனநாயக செயற்பாடுகள் தொடர்பில் ஈடுபடுகின்ற முறையை சுட்டிக்காட்டல் மற்றும் அதற்கமைய உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகளின் திறன் விருத்திச் செயன்முறையை முறையாக வரிசைப்படுத்துவதாகும்.

2.2. நிறுவகத்தின் நிருவாகக் கூற்று

நிறுவகத்தின் பெயர்	:	இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் (1999 இன் 31 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டது)
செயற்பாடு ஆரம்பித்த திகதி	:	15.10.1999
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்	:	இலக்கம் 17, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07
கணக்காய்வாளர்கள்	:	கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்.
வங்கியாளர்கள்	:	இலங்கை வங்கி, சுதந்திர சதுக்க கிளை, கொழும்பு – 07.
வெளிநாட்டு சங்கங்கள்	:	அ. பொதுநலவாய உள்ளூராட்சி ஒன்றியம் (CLGF) ஆ. உள்ளூராட்சிப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவகங்களின் ஆசிய மற்றும் பசுபிக் வலையமைப்பு (LOGOTRI)
வெளிநாட்டு நிறுவனங்கள்	:	அ. USAID – SDGAP ஆ. UNHABITAT இ. CHRYSALIS

இணைந்த கருத்திட்டங்கள் : அ. இலங்கையின் நகரங்களின் நிலைமைக் கருத்திட்டம்

ஆ. UNDP நிதி வழங்குகின்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய கணக்கீட்டு முறைமையை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சித்திட்டம்

2.3 நிருவாக சபை உறுப்பினர்கள்

2019 சனவரி 01 முதல் 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான நிருவாக சபை

பதவிவழியாக நியமனம் செய்யப்படுகின்ற உறுப்பினர்கள் எட்டு பேரையும் (08), நியமனம் செய்யப்படுகின்ற உறுப்பினர்கள் ஐந்து பேரையும் (05) கொண்டதாக பதின்மூன்று (13) உறுப்பினர்களை இந்த நிருவாக சபை உள்ளடக்கியுள்ளது.

பதவி வழியாக மற்றும் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் பின்வருமாறாகும்.

- திரு எச்.ீ. கமல் பத்மசிறி (2019 ஏப்ரல் வரை) - தவிசாளர்
  செயலாளர் - மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
  மற்றும்
  திரு எச்.எம். காமினி செனவிரத்ன (2019 ஆகஸ்ட் முதல்)
  செயலாளர், அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

- திரு எம்.எம்.பீ.கே. மாயாதுன்னே - உறுப்பினர்
  செயலாளர், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

- திரு அநுர திசாநாயக்க - உறுப்பினர்
  செயலாளர், மகாவளி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

- திரு டி. சுவர்ணபால - உறுப்பினர்
  செயலாளர் – உள்துறை அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி
  மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

- கலாநிதி திரு எம்.கே.சீ. சேனாநாயக்க (2016 அக்டோபர் முதல்) - உறுப்பினர்
  பணிப்பாளர், நிதிக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்,
  நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு

- கலாநிதி யு.அநுர குமார - உறுப்பினர்

பீடாதிபதி, முகாமைத்துவப் பீடம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

- திரு டி.பி. ஹெட்டிஆரச்சி - உறுப்பினர்
  முன்னாள் மேலதிகச் செயலாளர்,
  மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

- திரு இஸட்.ஏ.எம். அஹமட் - உறுப்பினர்
  சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு

- திருமதி ரேனுகா எம். வீரகோன் - உறுப்பினர்
  சட்டத்தரணி

- திரு என்.எம்.எம். நின்சீர் - உறுப்பினர்
  தலைவர் - ஜே.ஐ.சீ. தனியார் கம்பனி

- திரு சுஜீவ சமரவீர - உறுப்பினர்
  பணிப்பாளர் - இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் மற்றும் கூட்ட ஏற்பாட்டாளர்

நிருவாக சபையின் செயலாளர்

திருமதி நிரஞ்சலா பெரேரா
பணிப்பாளர் சபை செயலாளர் மற்றும் பணிப்பாளர் / பி.நி.அலுவலரின் அந்தரங்க உதவியாளர்.

நிறுவகத்தின் முகாமைத்துவம் மற்றும் செயற்பாடு தொடர்பிலான சகல தீர்மானங்களும் மேற்கொள்ளப்படுவது நிருவாக சபையினாலாகும். குறித்த சில அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் தொழில்வாண்மை நிறுவகங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக இந்த நிருவாக சபை அமைந்துள்ளது. இச்சபைக்கு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் தலைமை தாங்குகின்றார்.

நிருவாக சபையின் கூட்ட ஏற்பாட்டாளராக செயற்படுகின்ற இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் பணிப்பாளர் இந்நிறுவகத்தின் பிரதம நிறைவேற்று அலுவலராகவும் உள்ளார். நிருவாக சபையின் பொதுவான வழிகாட்டலின் கீழ் இவர் செயற்பட்டு வருகின்றார். பணிப்பாளரின் உதவிக்கென ஆலோசனைக் குழு, பிரதிப் பணிப்பாளர்கள், கணக்காளர் மற்றும் உதவிப் பதவியணியினர் செயற்பட்டு வருகின்றனர்.

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகமானது தற்போது முக்கியமாக ஒன்பது பிரிவுகளின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. அவையாவன, பொது முகாமைத்துவம் மற்றும் மனிதவள அபிவிருத்திப் பிரிவு, பொறியியல் பிரிவு, பௌதீக திட்டமிடல் பிரிவு, நிதி முகாமைத்துவப் பிரிவு, சட்டம் மற்றும் சட்டவாக்கப் பிரிவு, ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு, நிருவாக மற்றும் கணக்குகள் பிரிவு ஆகியனவாகும்.

	நிருவாக சபை தவிசாளர் / உறுப்பினர்களின் பெயர்கள்	பதவி	நிருவாக சபை கூட்டம் இடம்பெற்ற திகதி				
			கூட்ட இல. 165 2019 ஏப்ரல் 09	கூட்ட இல. 166 2019 ஆகஸ்ட் 06	கூட்ட இல. 167 2019 செப்தெம்பர் 26	கூட்ட இல. 168 2019 ஏப்ரல் 09	மொத்தம்
1	திரு எச்.ீ. கமல் பத்மசிறி (2019 ஏப்ரல் வரை) செயலாளர் - மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் திரு எச்.எம். காமினி செனவிரத்ன (2019 ஆகஸ்ட் வரை) பொது நிருவாகம், உள்ளாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	தவிசாளர்	√	√	√	√	**04**
2	திரு எம்.எம்.பீ.கே. மாயாதுன்னே செயலாளர், நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சு	உறுப்பினர்	சமூகமளிக்கவில்லை	சமூகமளிக்கவில்லை	√	√	**02**
3	திரு அநுர திசாநாயக்க, செயலாளர், மகாவளி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	உறுப்பினர்	√	சமூகமளிக்கவில்லை	சமூகமளிக்கவில்லை	-	**01**
4	திரு பெர்னார்ட் வசந்த செயலாளர், வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு	உறுப்பினர்	சமூகமளிக்கவில்லை	சமூகமளிக்கவில்லை	√	√	**02**
5	திருமதி பி.எம்.எம். பஸ்நாயக்க (2019 ஆகஸ்ட் முதல்) மேலதிக செயலாளர், விசாரணை, கண்காணிப்பு மற்றும் ஆராய்ச்சி - பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு	உறுப்பினர்	சமூகமளிக்கவில்லை	√	√	-	**02**
6	கலாநிதி திரு எம்.கே.சீ. சேனாநாயக்க - பணிப்பாளர், நிதிக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு	உறுப்பினர்	√	√	சமூகமளிக்கவில்லை	√	**03**
7	கலாநிதி யு.அநுர குமார பீடாதிபதி, முகாமைத்துவப் பீடம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்	உறுப்பினர்	√	சமூகமளிக்கவில்லை	√	சமூகமளிக்கவில்லை	**02**
8	திரு நவீன் சானக்க ஹெட்டியதுரகே சட்டத்தரணி	உறுப்பினர்	√	√	சமூகமளிக்கவில்லை	√	**03**
9	திரு டி.எச்.பி.ஏ.எஸ். டி சில்வா பிரதிப் பணிப்பாளர் நாயகம் - சுகாதார அமைச்சு	உறுப்பினர்	√	√	√	√	**04**
10	திரு புத்தி ஜயவர்த்தன	உறுப்பினர்	சமூகமளிக்கவில்லை	சமூகமளிக்கவில்லை	சமூகமளிக்கவில்லை	சமூகமளிக்கவில்லை	**00**
11	திரு ஆனந்த விக்ரம	உறுப்பினர்	சமூகமளிக்கவில்லை	√	சமூகமளிக்கவில்லை	சமூகமளிக்கவில்லை	**01**
12	**திரு எம்.எஸ்.எம். ரிஸ்மி / திரு ஈ.எம்.டி.பி. ஏக்கநாயக்க** பணிப்பாளர், இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம்	கூட்ட ஏற்பாட்டாளர்	√	√	√	√	**04**
			07	**07**	**07**	**07**	

2.4. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள்

பின்வரும் உறுப்பினர்கள் 2019 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்களாக செயற்பட்டார்கள்.

(அ) கலாநிதி எம்.கே.சீ. சேனாநாயக்க - தவிசாளர்
பணிப்பாளர் - நிதித் திட்டமிடல் திணைக்களம், நிதி திட்டமிடல் அமைச்சு

(ஆ) திரு நவீன் சானக்க ஹெட்டியாதுரகே - உறுப்பினர்
சட்டத்தரணி

(இ) திரு ஈ.எம்.டி.பி. ஏக்கநாயக்க (2019 ஏப்ரல் வரை) - உறுப்பினர்
நிருவாக சபை உறுப்பினர்

(ஈ) திரு ஈ.எம்.டி.பி. ஏக்கநாயக்க (2019 யூலை வரை) - உறுப்பினர்
நிருவாக சபை உறுப்பினர்

(உ) உள்ளகக் கணக்காய்வாளர் - கூட்ட ஏற்பாட்டாளர்
இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம்

வெளி அவதானிப்பாளர்கள்

(ஊ) திரு அசோக தனபால
கணக்காய்வு அத்தியட்சகர் - கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

(எ) திரு டி.எஸ்.ஆர். பெர்ணாந்து
பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் - மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் செயலாளர்,
(ஏ) திருமதி நிரஞ்ஜலா பெரேரா
பணிப்பாளர் சபை செயலாளர் மற்றும் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அலுவலரின் அந்தரங்க உதவியாளர்

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் பதவியணியிலிருந்து

(ஐ) திரு ஹிரான ரதீஷ
கணக்கீட்டு அலுவலர் / உதவிப் பணிப்பாளர் (நிதி) கடமைகளை நிறைவேற்றுவதன் அடிப்படையில்

(ஒ) திரு அசேல சமரரத்ன
நிருவாக அலுவலர்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது நிருவாக சபை உறுப்பினர்கள் மூவரைக் கொண்டிருக்கின்றது. பொதுத் திறைசேரியின் பிரதிநிதியான கலாநிதி திரு எம்.கே.சீ. சேனாநாயக்க அதற்குத் தலைமை தாங்கிவந்ததுடன், நிருவாக சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவுக்குப் பெயரிடப்பட்ட அலுவலர்களாக திரு நவீன் சானக்க ஹெட்டியாதுரகே மற்றும் திரு ஈ.எம்.டி.பி. ஏன்னநாயக்க ஆகியோர் செயற்பட்டார்கள்.

இதற்கு மேலதிகமாக, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திற்குப் பொறுப்பான கணக்காய்வு அத்தியட்சகரும், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளரும், பிரதான அவதானிப்பாளர்களாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் பங்கேற்றார்கள்.

நிருவாக அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுலவர் / உதவிப் பணிப்பாளர் - நிதி (பதில் கடமையாற்றல்) மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட பதவிகளை வகிக்கின்ற அலுவலர்களும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அழைப்பின் பேரில் தெளிவுபடுத்தல்களை மேற்கொள்வதற்காக தேவையான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் குழுவின் முன் ஆஜராகியுள்ளார்கள்.

உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினாலாகும். கணக்காய்வு விடயப்பரப்பின் கீழ் செயற்பாட்டு நடவடிக்கைகள் நிருவாகம், நிதி மற்றும் நடவடிக்கைப் பிரிவுகளை உள்ளடக்கியவாறு ஆண்டினுள் அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வதற்குச் சமாந்தரமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினால் செயற்பாட்டு நடவடிக்கைகள், நிருவாக மற்றும் நிதிப் பிரிவை மையமாகக் கொண்டு காணப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் மதிப்பீடு சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பலவீனங்கள் இனங்காணப்பட்டன. முகாமைத்துவத்துடன் கலந்துரையாடுவதன் மூலம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை தொடர்பில் தேவையான சீராக்கல்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிறுவகத்தின் உள்ளகச் சுற்றறிக்கைகள், நிதிப் பிரமாணங்கள், தாபன விதிக்கோவை மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கு இசைவாக நிறுவனத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்வதற்காக கணக்காய்வு திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல், நிறுவனத்தின் சொத்துக்களைப் பேணுதல் மற்றும் பராமரிப்பு மற்றும் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் திரவத்தன்மையை பேணிவருவது உள்ளடங்களாக சகல நிதி, நிருவாக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளும் இதன் போது கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் கணக்கீட்டு அலுவலர் / உதவி பணிப்பாளர் (நிதி) (பதில் கடமையாற்றல்) தயார் செய்கின்ற நிதிசார் முன்னேற்றம் பற்றிய அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு அது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய சிபாரிசுகள் நிருவாக சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டன. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அதன் கூட்டங்களின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் அவதானிப்புக்கள், தீர்மானம் மற்றும் சிபாரிசுகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

இதற்கு மேலதிகமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற விடயங்கள் மற்றும் கணக்காய்வு முறையியல்களின் அடைவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு பலவீனங்களை குறைத்துக் கொள்ளத் தேவையான அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டன. இந்த ஆண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் மூன்று தடவைகள் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டது.

குறிப்பு : இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் பதவியை வகித்த திரு ரஞ்ஜித் லியனஆரச்சி பதவி விலகியதன் காரணமாகவும், புதிய உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமனம் செய்வது தாமதமடைந்ததன் காரணமாகவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் பணிப்பாளரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், திரு ஈ.எம்.டி.பி. ஏக்கநாயக்க நிருவாக சபை உறுப்பினராகவும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினாலும் நியமனம் செய்யப்பட்ட இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அலுவலராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவுக்கு புதிதாக பெயரிடுவது நிருவாக சபையினால் திரு எக்கநாயக்கவினால் வெற்றிடமாகி பதவிக்குப் பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்களின் பெயர்கள்	**குழுவில் வகிக்கும் பதவி**	**குழுக் கூட்டம் இடம்பெற்ற திகதி**			**வருகை தந்த எண்ணிக்கை**
			கூட்ட இல. 01 2019 ஏப்ரல் 30	கூட்ட இல. 02 2019 யூன் 11	கூட்ட இல. 03 2019 யூலை 23	
1	கலாநிதி திரு எம்.கே.சீ. சேனாநாயக்க பணிப்பாளர், நிதித் திட்டமிடல் திணைக்களம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு **நிருவாக சபை உறுப்பினர்**	தவிசாளர்	√	√	√	**03**
2	திரு நவீன் சானக்க ஹெட்டியாதுரகே **நிருவாக சபை உறுப்பினர்**	உறுப்பினர்	√	√	√	**03**
3	திரு ஈ.எம்.டி.பி. ஏக்கநாயக்க **நிருவாக சபை உறுப்பினர்**	உறுப்பினர்	√	√	√	**03**
4	உள்ளக கணக்காய்வாளர், இலங்கை உள்ளூர் ஆளுகை நிருவகம்.	கூட்ட ஏற்பாட்டாளர்	--	--	--	**00**
வெளியார்						
5	திரு அசோக தனபால கணக்காய்வு அத்தியட்சகர் - கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்	அவதானிப்பாளர்	√	√	√	**03**
6	திரு டி.எஸ்.ஆர். பெர்ணாந்து பிரதம கணக்காய்வாளர், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிப் பிரிவு	அவதானிப்பாளர்	√	√	√	**03**
			05	**05**	**05**	

திருமதி நிரஞ்ஜலா பெரேரா (பதவிநிலைச் செயலாளர் மற்றும் பணிப்பாளர் / பி.நி.அலுவலரின் அந்தரங்க உதவியாளர்) - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் செயலாளராக செயற்பட்டார்.

3.0. மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாற்றுகைகளை மேம்படுத்துவது தொடர்பில் நிறுவனத்தின் தத்துவ ரீதியான அதிகாரம் மற்றும் செயற்பணி பற்றிய மீளாய்வு

3.1. இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் ஆற்றப்படுகின்ற மதியுரைச் சேவை

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகமானது, ஆலோசனைச் சேவைகளுக்காக ஏழு (07) பிரிவுகளைத் தாபித்துள்ளது.

அ. பொறியியல்

ஆ. பொது முகாமைத்துவம்/மனித வள அபிவிருத்தி

இ. பௌதீக திட்டமிடல்

ஈ. நிதி முகாமைத்துவம்

உ. சட்டம் மற்றும் சட்டவாக்கப் பணிகள்

ஊ. ஆராய்ச்சி

எ. பயிற்சியும், அபிவிருத்தியும்

ஏ. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

3.2. இலக்குக் குழு

நிறுவகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பயிற்சிகள், ஆராய்ச்சி மற்றும் ஏனைய செயலமர்வுகள் போன்ற பயன்களைப் பெறுகின்ற பயனாளிகளாக இருப்பது 09 மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அவற்றின் அலுவலர்களாவார்கள்.

ஒவ்வொரு இலக்குக் குழுவினரும் மற்றைய குழுவினரிலிருந்து வித்தியாசப்படுகின்றனர். மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி அலகுகளுடன் நடாத்தப்பட்ட பயிற்சித் தேவைகளின் பகுப்பாய்வு மற்றும் கலந்துரையாடல்களின் மூலம் இனங்காணப்பட்ட தேவைப்பாடுகளுக்கு பொருத்தமானவாறு இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. மாகாண மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடுவது தொடர்பாக ஒத்துழைப்பு ரீதியான வகிபாகமொன்றை எமது நிறுவகம் கொண்டுள்ளது.

3.3. ஒருங்கிணைப்பும், கண்காணிப்பும்

மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி அலகுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர்களினால் நடாத்தப்படுகின்ற பயிற்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வதும், கண்காணிப்புச் செய்வதும் இந்த நிறுவகத்தின் முக்கிய பணியொன்றாகக் கருதப்படுகின்றது. மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி அலகுகள் மற்றும் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற மாதாந்த மீளாய்வுக் கூட்டங்களின் போது முன்னேற்ற மீளாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி அலகுகளின் கூட்டங்கள்





3.4. வியாபார அபிவிருத்தி

அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் பல அவர்களின் பெரும்பாலான கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் உதவியை எதிர்பார்ப்பதை கடந்தகால அனுபவங்கள் சுட்டிக்காட்டுகின்றன. சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கான கருத்திட்டங்களை இனங்காண்பதற்காக இந்தச் செயற்பாடுகளை ஓரளவுக்கு தெரிவு செய்துகொள்வதும் அத்தியாவசியமானதாகும். இந்த வியாபார அபிவிருத்தி நடவடிக்கைகள் எமது நிறுவகத்தின் பணிப்பாளரின் கண்காணிப்பின் கீழ் காணப்படுகின்றன. குறித்த நிறுவனங்களுடன் கலந்துரையாடிய பின்னர் நிருவாக சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டங்களை உகந்தவாறு அமுல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை பணிப்பாளர் மேற்கொண்டுள்ளார்.

கத்தார் தூதுக் குழுவின் விஜயம் - 2019 மார்ச் மாதம் 29 ஆம் திகதி

சுயாதீன நிறுவனம் என்ற வகையில் செயற்பட்டு வருகின்ற கத்தார் இராஜ்ஜியத்தின் மத்திய மாநகர சபையானது, 242 இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையைக் கொண்ட வலயங்களைச் சேர்ந்த 29 உள்ளூராட்சி மன்றங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் உறுப்பினர்கள் 29 பேரைக் கொண்ட மாநகர சபை அலுவல்கள் தொடர்பில் நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும்

மேற்கொள்கின்றது. தொழில்நுட்ப அறிவு, நல்லாட்சி மற்றும் ஒத்துழைப்புப் பொறிமுறையை பகிர்ந்துகொள்ளும் அபிலாசையுடன் இரு நாடுகளினதும் அலுவலர்களை இரு நாடுகளுக்கும் விஜயம் மேற்கொள்ளச் செய்வதற்காக கொழும்பில் அமைந்துள்ள கத்தார் தூதரகம் ஆயத்தங்களைச் செய்தது.

அதற்கமைய, இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் கத்தார் இராஜ்ஜியத்தின் மத்திய மாநகர சபையின் தவிசாளர் பதவியை வகிக்கின்ற மேன்மைதங்கிய மொஹமட் பின் ஹமூத் ஷாபி அல்-ஷாபி அவர்கள் உள்ளிட்ட கத்தார் இராச்சியத்தின் தூதுக் குழுவினருக்கு "இலங்கையின் உள்ளூராட்சி ஆளுகை கட்டமைப்பின் பன்முகப்படுத்தலின்தன்மை" எனும் தொணிப்பொருகளின் கீழ் ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது.











3.5. தேசிய மற்றும் சர்வதேச பயிற்சி மற்றும் கற்கை நிறுவனங்களுடனான தொடர்புகள்

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளது. இந்தத் தொடர்புகள் இரு தரப்பினரதும் நலன்களைப் பேணுகின்றவாறு பேணிவரப்படுகின்றன. இவ்வாறு ஏற்படுத்திக்கொள்ளப்படுகின்ற தொடர்புகள் நாட்டிற்கு வெளியேயான பயிற்றுவிப்புத் தேவைகள் மற்றும் அவர்களின் ஒத்துழைப்பை மேம்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக் காரணமாகியுள்ளன. 2019 ஆம் ஆண்டில் USAID, UN-HABITAT, UNDP, CHRYSALIS, DFAT - அவுஸ்திரேலியா, உலக வங்கி, ஐரோப்பிய சமூகம் ஆகிய நிறுவனங்களுடன் தொடர்ச்சியாகத் தகவல்களைப் பரிமாற்றிக்கொள்வதற்கு இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் உத்தேசித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக, 1990 20 ஆம் இலக்க தொழில் மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்துகொள்ளும் வாய்ப்பும் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்திற்கு 2019 ஆம் ஆண்டில் கிடைத்தது. இதன் பதிவு இலக்கம் P01/0881 ஆகும்.

3.6. விசேட நிகழ்வுகள்

3.6.1. 2020 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி மன்றங்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உபாயமுறைகள் சம்பந்தமான தேசிய கருத்தரங்கு

குறிக்கோள் :

- இந்தக் கருத்தரங்கின் அடிப்படைக் குறிக்கோளாக இருப்பது நவீன தொழில்நுட்பம் மற்றும் கணினி முறைமைக்கு ஏற்புடையதாக்குவதில் காணப்படுகின்ற பிரதான சிக்கல்கள் தொடர்பிலான புரிந்துணர்வைப் பெற்றுக் கொடுப்பதாகும். இதனூடாக கணினி அப்லிகேசன்கள் பற்றிய அடிப்படை எண்ணக்கரு மற்றும் அடிப்படை அம்சங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் தீர்மானம் மேற்கொள்ளும் போது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் சம்பந்தமான அடிப்படை அறிவைப் பெற்றுக் கொடுப்பது மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பிலும், நவீன தீர்வுகளை உறுதி செய்வதற்கும் தேவையான முறையியல்களை உள்ளடக்கியிருப்பதாகும்.
- தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட தொழில்நுட்பம் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் உரிய ஏனைய அமைப்புக்களில் செயற்படுகின்ற தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களின் அறிவையும், திறமைகளையும் வளர்ப்பதற்காக.

யாருக்காக :

- உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள், செயலாளர்கள், தொழில்நுட்ப அலுவலர்கள், தகவல் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் இவ்விடயம் தொடர்பில் விருப்பம் கொண்டுள்ள தரப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் கௌரவ உறுப்பினர்கள், அரச சேவையிலுள்ள அலுவலர்கள் மற்றும் இப்பாடநெறியை கற்றுக் கொள்ள விரும்பம் கொண்டுள்ளவர்கள்.

உள்ளடக்கம்

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் ஈடுபாட்டை அறிமுகம் செய்தல்.
- 2020 இன் நோக்கு
- ஈ-உள்ளூராட்சி மற்றும் ஏனைய அம்சங்கள்
- புத்தாயிரமாம் ஆண்டின் சவால்கள்
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மனிதவள அபிவிருத்தி
- வருமானம் சேகரிப்பதை தன்னியக்கமயப்படுத்தல்
-






4.0 2019 ஆம் ஆண்டுக்கான நிறுவகத்தின் ஒட்டுமொத்த செயலாற்றுகை

நிறுவகத்தினால் அமுல்படுத்தப்பட்ட தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்களின் பொழிப்பு - 2019

அட்டவணை **2**


	மேல்	வடமேல்	வட மத்தி	சபறகமுவா	மத்திய	தென்	ஊவா	கிழக்கு	வடக்கு	மொத்தம்
பொறியியல்	03	03	03	03	03	03	03	02	02	25
பொது முகாமைத்துவம்	03	03	03	03	03	03	03	03	03	27
பௌதீக திட்டமிடல்	03	03	03	03	03	03	03	03	03	27
நிதி முகாமைத்துவம்	02	02	02	02	02	02	02	02	02	18
சட்டம் மற்றும் சட்டவாக்க அலுவல்கள்	03	03	03	03	03	03	03	03	03	27
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்	03	03	03	03	03	03	03	03	03	27
ஆராய்ச்சி	01	--	01	01	01	01	01	--	01	07
திண்மக் கழிவுப் பொருள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு	03	02	02	02	02	02	02	02	01	18
மொத்தம்	21	19	20	20	20	20	20	16	18	**174**

4.2. இலக்கு மற்றும் உண்மைப் பயனாளிகள்



படம் 1


4.3 சகல பிரிவுகளுக்குமான வரவு செலவுத்திட்ட ஒதுக்கமும், மொத்தச் செலவினமும்



படம் 2


**** கட்டணம் அறவிட்டுக் கொள்வதற்கு ஒதுக்கப்பட்ட தொகை இன்றி உண்மைச் செலவினம் கணிப்பிடப்பட்டுள்ளது*

4.4 பொதுத் திறைசேரியின் நிதியத்தை நிதிசார் அடிப்படையில் பயன்படுத்துவது பற்றிய ஒப்பீடு 2015, 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகள்



படம் 3

4.5 கடந்த சில ஆண்டுகளில் பெற்ற இலாபம் /நட்டம்



படம் 4

4.6. நிறுவகத்தின் ஒவ்வொரு பிரிவினதும் செயலாற்றுகை பற்றிய தகவல்கள்

4.6.1. பொறியியல் பிரிவு

- ஒதுக்கப்பட்ட நிதி - ரூபா 3,000,000.00
- பயன்படுத்திய தொகை - ரூபா 3,000,000.00
- பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் / செயலமர்வுகள் (மாகாண மட்டத்திலான நிகழ்ச்சிகளும் உள்ளடங்களாக) - 24
- உண்மையான பயனாளிகள் - 1303
- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் - 64.29%

குறியீடு SLILG/07/NL/2019	நிகழ்ச்சித்திட்டத்தின் / செயற்பாட்டின் பெயர்	இலக்குக் குழு	கால எல்லை	மாதம்	நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கை
E/07/NL/2019/01	அறிவு மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (நிலஅளவை மற்றும் நிலத்தை மட்டம் செய்தல்)	தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் உரிய பதவியணி	02 நாள்	மே.மா. – மார்ச் வ.ம.மா. - மே தெ.மா. – யூலை வ.மே. – யூன் கி.மா. ஆகஸ்ட் வ.மா. அக். ஊ மா. செப் ம.மா. – ஏப்ரல் சப.மா. செப்.	09
E/07/NL/2019/02	அறிவு மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (கொன்க்றீட்ட தொழில்நுட்பம், வெளிக்கள பரிசோதனை, பொறியியல் பணிகளுக்கு மண் இனங்காணல் மற்றும் அடிக்கல்)	தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் உரிய பதவியணி	02 நாள்	மே.மா. – மே வ.ம.மா. - மே தெ.மா. –மார்ச் வ.மே. – சன. கி.மா. ஆகஸ்ட் வ.மா. யூலை ஊ மா. ஏப். ம.மா. – யூன் சப.மா. பெப்.	09
E/07/NL/2019/03	அறிவு மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - சுற்றாடல் சட்ட நடைமுறை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைமுறை	தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் உரிய பதவியணி	01 நாள்	மே.மா. யூன் வ.ம.மா. – மார் தெ.மா. ஆகஸ் வ.மே. – சன. கி.மா. அக். வ.மா. செப் ஊ.மா. யூலை ம.மா. – பெப் சப.மா. அக்.	09

E/07/NL/2019/04	அறிவு மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - எரிசக்தியை சேமித்தல் மற்றும் தரமான பொருட்களை இனங்காணல்	தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் உரிய பதவியணி	02 நாள்	யூன் யூலை ஆகஸ்ட்	03
E/07/NL/2019/05	பெறுகை முறையியல் மற்றும் பிணை	தொழில்நுட்ப அலுவலர்கள், செயலாளர்கள் மற்றும் விடய அலுவலர்கள்	03 மாதம்	மார்ச் - மே	01
E/07/NL/2019/05	பொறியியல் டிப்ளோமா	தொழில்நுட்ப அலுவலர்கள், செயலாளர்கள் மற்றும் ஏற்புடைய அலுவலர்கள் (சுமார் 50)	18 மாதம்	மே 2019 முதல் நவம்பர் 2020	1

உள்ளூராட்சி மன்றங்களின் தொழில்நுட்பப் பிரிவுகள் மற்றும் மாகாண சபைகளின் மாகாண சபைகளின் பொறியியல் பிரிவுகளின் செயலாற்றுகையை மேம்படுத்துகின்ற பொறுப்பு இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்திற்கு உள்ளது. நிறுவன ரீதியான நோக்கங்களுக்கமைய பயிற்றுவித்தல், ஆராய்ச்சிச் செயற்பாடுகளினூடாக இந்த நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.





பொறியியலாளர்கள், வேலைப் பொறுப்பு அதிகாரிகள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களுக்கு ஏற்புடையவாறு குறித்த துறைகளில் இந்த ஆண்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக திறன்களை விருத்திசெய்வது சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டங்களும் மாகாண சபைகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள மாகாண பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களுக்காக நடாத்தப்பட்டுள்ளன.

6.2. பொது முகாமைத்துவ மற்றும் மனித வள அபிவிருத்திப் பிரிவு

இலங்கையின் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களினதும், அலுவலர்களினதும் மனிதவள முகாமைத்துவ ஆற்றல்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் பொது முகாமைத்துவப் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவினால் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தற்போதைய சாத்தியக்கூறினை வளர்க்க வேண்டியதன் அவசியத்தன்மை தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டு தாபனரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அரசியல் தலைமைத்துவம், அலுவலர்கள் மற்றும் சிவில் சமூக அங்கத்தவர்கள் மத்தியில் அதிகாரப் பகிர்வு மற்றும் நல்லாட்சி பற்றிய அறிவை வளர்ப்பதற்கு இதன் போது முன்னுரிமை வழங்கப்படுகின்றது. தேசிய மட்டத்தில் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக தேவைகளுக்கு ஏற்றவாறு விசேட நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகம் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

- ஒதுக்கப்பட்ட நிதி - ரூபா 3,780,000.00
- பயன்படுத்திய தொகை - ரூபா 2,570,165.35
- பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் / செயலமர்வுகள் (மாகாண மட்டத்திலான நிகழ்ச்சிகளும் உள்ளடங்களாக) - 35
- உண்மையான பயனாளிகள் - 1888
- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் - 67.99%

குறியீடு	நிகழ்ச்சித்திட்டத்தின் / செயற்பாட்டின் பெயர்	இலக்குக் குழு	கால எல்லை	மாதம்	நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணிக்கை
GM/01	தொடர்பு முகாமைத்துவத்தின் கீழ் பொதுசன தொடர்பு பற்றிய செயலமர்வு	தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் / ஆணையாளர், சபை செயலாளர், / நிருவாக அலுவலர்கள்	12 மாதம்	சனவரி - டிசம்பர்	09
GM/02	செயலாற்றுகை முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு பற்றிய செயலமர்வு	நிருவாக அலுவலர்கள் / விடயம் சம்பந்தப்பட்ட இலிகிதர்கள்	12 மாதம்	சனவரி - டிசம்பர்	09
GM/03	போதைவஸ்து ஒழிப்பு பற்றி பயிற்றுவிப்பாளர் பயிற்சி	தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் / ஆணையாளர் / சபை செயலாளர் / நிருவாக அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர் / சிற்றூழியர்	12 மாதம்	மே – யூலை	09
GM/04	போதைவஸ்து ஒழிப்பு பற்றி விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம்	தெரிவு செய்யப்பட்ட அலுவலர்களுக்கு	03 மாதம்	மே – யூலை	01







இப்பிரிவின் குறிக்கோள்கள் :

- நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்படுகின்ற உறுப்பினர்கள் மற்றும் பதவியணியினருக்கு உரித்தான முகாமைத்துவ திறன்களை மேம்படுத்தல்.
- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் மற்றும் அவற்றில் சேவையாற்றுகின்ற பதவியணியினருக்கு தமது செயலாற்றுகையை மேம்படுத்திக்கொள்ளக்கூடியவாறு திறன்களை வளர்த்தல் மற்றும் சமுதாயத்திற்கு சிறந்ததொரு அரச சேவையை ஆற்றக்கூடிய வகையில் மனப்பாங்கு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தல்.
- உப தேசிய மட்டத்தில் அபிவிருத்தி தொடர்பாக தடைகள் காணப்படின் அவற்றை அகற்றுவதற்காக தனியார் துறை மற்றும் அரசதுறைக்கு இடையே பங்குடைமையை வளர்த்தல்.

- ❖ பொது மக்களுக்கு மிகவும் சிறந்ததொரு சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்கும், ஏனைய வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தவும், நிறுவனங்களின் வினைத்திறன், விளைதிறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல்

நாட்டிலும், பிராந்தியத்திலும் உள்ளூராட்சி தொடர்பான சிறந்த நடைமுறைகள் தொடர்பாக ஆராய்ந்த பின்னர் ஒவ்வொரு வருடமும் செயல்ரீதியான திட்டமொன்று தயார் செய்யப்படுகின்றது. குறிப்பாக தற்போதைய சூழலை எடுத்துநோக்கும் போது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் காணப்படுகின்ற சாத்தியக்கூறு மட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றது.

4.6.3. பௌதீக திட்டமிடல் பிரிவு

பௌதீக திட்டமிடல் பிரிவின் பணிகளை அமுல்படுத்துவதானது 2003 ஆம் ஆண்டில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. தேவைகள் பற்றிய கற்கைகளை மேற்கொள்ளல், தேவைகளை மதிப்பீடு செய்த பின்னர் மொடியுல்களை தயார் செய்வது ஆரம்பிக்கப்பட்டதுடன், அதன் பெறுபேறாக 2004 ஆம் ஆண்டு முதல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் ஆராய்ச்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற தேவைகள் பற்றிய மதிப்பீடுகளுடன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வருடாந்தம் திருத்தம் செய்யப்பட்டன. முழுநேர அடிப்படையில் கடமையாற்றி வருகின்ற ஆலோசகர் ஒருவரின் தலைமைத்துவத்தின் கீழ் இயங்கிவருகின்ற இப்பிரிவுக்கு பௌதீக திட்டமிடல் அலுவலர் ஒருவரின் உதவியும் கிடைக்கின்றது. கட்டிட வரைபடங்களை அங்கீகரித்தல், இடங்களை இனங்காணல், வினைத்திறன் மற்றும் நியாயமானவாறு காணிப்பயன்பாடு, கட்டிட வரைபடங்கள் தொடர்பிலான சட்ட ரீதியான ஏற்பாடுகளை அமுல்படுத்தல் ஆகிய பணிகள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. நகரஅபிவிருத்தி அதிகாரசபை (UDA) மற்றும் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் (NPPD) சட்டங்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட சட்டங்கள், கட்டளைச் சட்டங்கள் மற்றும் சட்ட மறுசீரமைப்புக்களுக்கு இசைவாக உள்ளூராட்சி மன்றங்களினால் திட்டங்களைத் தயார் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே அபிவிருத்தி பின்னணியை அடிப்படையாகக் கொண்டு இப்பிரிவினால் உள்ளூராட்சிச் செயற்பாடுகளில் மிகவும் முக்கியமான துறைகள் இதன் கீழ் உள்ளடக்கப்படுகின்றன.

2019 ஆம் ஆண்டில் கருத்திட்ட முகாமைத்துவம் தொடர்பில் ஆரம்பிக்கப்பட்ட சான்றிதழ் பாடநெறிக்கு (கட்டணம் அறவிடல்) மேலதிகமாக பின்வரும் நடவடிக்கைகளும் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

குறியீடு	நிகழ்ச்சித்திட்டத்தின் / செயற்பாட்டின் பெயர்	இலக்குக் குழு	கால எல்லை	மாதம்	நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணிக்கை
PP/13/NL/2019-01	உள்ளூராட்சி மன்றங்களின் பௌதீக திட்டமிடல் பற்றிய செயலமர்வு	உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், மாநகரசபை, நகர சபை, பிரதேச சபை / உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள், செயலாளர்கள், EOs, DAs, CDOs, TO ஆகிய அலுவலர்கள்	02 நாள்	சனவரி – மே	09 நிகழ்ச்சித்திட்டங்கள் (02 தமிழ் மொழி மூலம்)
PP/13/NL/2019-02	உள்ளூராட்சி மன்றங்களின் பௌதீக திட்டமிடல், அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் வருமான உருவாக்கம் பற்றிய செயலமர்வு	உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், மாநகரசபை, நகர சபை, பிரதேச சபை / உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள், செயலாளர்கள், EOs, DAs, CDOs, TO ஆகிய அலுவலர்கள்	02 நாள்	மே – ஆகஸ்ட்	09 நிகழ்ச்சித்திட்டங்கள் (02 தமிழ் மொழி மூலம்)
PP/13/NL/2019-03	நகரத் திட்டமிடல் கோட்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஏற்புடையதாக்குவது பற்றிய செயலமர்வு	உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், மாநகரசபை, நகர சபை, பிரதேச சபை / உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள், செயலாளர்கள், EOs, DAs, CDOs, TO ஆகிய அலுவலர்கள்	02 நாள்	செப்தெ.– நவம்பர்	09 நிகழ்ச்சித்திட்டங்கள் (02 தமிழ் மொழி மூலம்)
PP/13/NL/2019-04	கருத்திட்ட முகாமைத்துவம் பற்றிய சான்றிதழ் பாடநெறி	உள்ளூராட்சி மன்றங்களின் EM, PPAs, EOs, DAs, CDOs, TO ஆகிய அலுவலர்கள்	03 மாதம்	மே – ஆகஸ்ட்	01
PP/13/NL/2019-05	பௌதீக திட்டமிடல் பற்றிய தேசிய கருத்தரங்கு	அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள உயர் மட்ட அலுவலர்கள்		மே – நவம்பர்	01

குறிக்கோள்கள் :

1999 இன் 31 ஆம் இலக்க இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவக சட்டத்தின் 3 ஆம் பிரிவில் நிறுவனத்தின் பணிகள் விபரிக்கப்பட்டுள்ளன. மேற்படி பணிகளில், பின்வரும் பணிகள் பௌதீக திட்டமிடல் பிரிவுக்கு ஏற்புடையவையாகும். இப்பிரிவின் குறிக்கோள்களாக இருப்பது பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதாகும்.

- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களுக்கு தமது உத்தியோகபூர்வ கடமைகளை மென்மேலும் வினைத்திறன்மிக்கவாறும், காத்திரமான முறையிலும் நிறைவேற்றக்கூடிய வகையில் அவர்களின் திறமைகளை மேம்படுத்துவதை நோக்காக்க கொண்டு அவர்களுக்குப் பயிற்சி வாய்ப்புக்களைச் செய்துகொடுத்தல்.

- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் பௌதீக திட்டமிடல் துறையில் மதியுரைச் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்

- இந்த நிறுவனம் மற்றும் பிரிவுகளுக்கு உரித்தான குறிக்கோள்களுக்குச் சமமான குறிக்கோள்களைக் கொண்டுள்ள இலங்கையின் மற்றும் வெளிநாடுகளிலுள்ள ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- SCICG இன் ஆராய்ச்சிப் பிரிவின் உதவியுடன் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் கௌதீக திட்டமிடல் நடவடிக்கைகள் சம்பந்தமான விடயங்கள் தொடர்பில் ஆராய்ச்சிகளை நடாத்தல், அவற்றை மேம்படுத்தல் மற்றும் ஆராய்ச்சிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்துகொடுத்தல்.

- ஒதுக்கப்பட்ட நிதி - ரூபா 4,040,000.00
-
- பயன்படுத்திய தொகை - ரூபா 3,160,540.45
- பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் / செயலமர்வுகள் மாகாண மட்டத்திலான நிகழ்ச்சிகளும் உள்ளடங்களாக) - 28
- உண்மையான பயனாளிகள் - 1485
- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் - 78.23%





4.6.4 நிதி முகாமைத்துவப் பிரிவு

- ஒதுக்கப்பட்ட நிதி - ரூபா 3,240,000.00
- பயன்படுத்திய தொகை - ரூபா 3,170,038.88
- பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் / செயலமர்வுகள் (மாகாண மட்டத்திலான நிகழ்ச்சிகளும் உள்ளடங்களாக) - 18
- உண்மையான பயனாளிகள் - 1000
- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் - 97.84%

நிதி முகாமைத்துவப் பிரிவு பிரதானமாக பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துகின்றது.

- ✧ நிதி முகாமைத்துவம்
- ✧ வருமான முகாமைத்துவம்
- ✧ செலவின முகாமைத்துவம்
- ✧ கணக்கீடு
- ✧ வரவு செலவுத்திட்டமிடல்
- ✧ சம்பள மாற்றங்கள் மற்றும் சம்பளங்களைத் தயார் செய்தல்
- ✧ கணக்காய்வு

குறியீடு	நிகழ்ச்சித்திட்டத்தின் / செயற்பாட்டின் பெயர்	இலக்குக் குழு	கால எல்லை	மாதம்	நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணிக்கை
FM/08/NL/2019/01	இலங்கை அரச சேவையின் கணக்கீட்டுக் கொள்கைகளின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் சமர்ப்பித்தல் பற்றிய செயன்முறைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், கணக்கு அலுவலர்கள், புலனாய்வு அலுவலர்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அலுவலர்கள்	04 நாள்	மே – மே.மா. யூன் - தெ.மா., சப.மா. யூலை - ம.மா. ஆக. – வ.ம.மா., வ.மா செப். – கி.மா. அக். – வடமே. மா. நவ. – ஊவா	09
FM/08/NL/2019/02	உள்ளூராட்சி மன்றங்களில் வரவு செலவுத்திட்டத்தை தயார் செய்வது பற்றிய நிகழ்ச்சித்திட்டம்	உள்ளூராட்சி மன்றங்களின் கணக்காளர்கள், நிதி அலுவலர்கள், செயலாளர்கள் மற்றும் புலனாய்வு அலுவலர்கள்	02 நாள்	சன. – ம.மா. பெப். – வமே.மா. பெப். – சப. மா. மார்ச் - கி.மா. மார்ச் - மே.மா. ஏப்ரல் - ஊ.மா. வட. மா.	09
FM/08/NL/2019/03	உள்ளூராட்சி மன்றங்களின் நிதி முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா 2018/2019	உள்ளூராட்சி மன்றங்களின் கணக்காளர்கள், நிதி அலுவலர்கள், செயலாளர்கள், புலனாய்வு அலுவலர்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அலுவலர்கள்	01 வருடம்	2018 சனவரி – 2019 டிசம்பர்	01

மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், நகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் பிரதேச சபைகள் சட்டம் போன்ற தற்போது அமுலில் உள்ள சட்டங்களின் சட்டகத்திற்குள் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதை உறுதி செய்வதற்கான பிரதான தேவைப்பாடொன்றாக இந்த விடயம் இனங்காணப்பட்டுள்ளது.

மேலும், நிறுவனத்தின் நிதி முகாமைத்துவப் பிரிவினால் 2017 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை அரச சேவையின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய இத்தேவைப்பாடு இனங்காணப்பட்டுள்ளதுடன், மேற்படி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இப்பணியை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய வகையில் நல்ல முறையில் திட்டமிடப்பட்டுள்ளன.







4.6.5 சட்டம் மற்றும் சட்டவாக்க அலுவல்கள் பிரிவு

இலங்கையின் உப தேசிய மட்டத்திலான நிறுவனங்களுக்கு தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களின் சட்டவாக்க ஆற்றல்களை வலுவூட்டுவதற்காக இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் சட்டம் மற்றும் சட்டவாக்க அலுவல்கள் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது, நாட்டின் உபதேசிய மட்டமானது, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களை உள்ளடக்கியிருப்பதுடன், அவை தொடர்பான நிருவாக சட்ட ஏற்பாடுகள் மூலம் அந்நிறுவனங்களுக்கு சட்டரீதியான தத்துவங்கள் அளிக்கப்பட்டுள்ளன. எனவே மேற்படி நிறுவகங்களின் ஒழுங்கமைப்பு, கூட்டிணைத்தல், அதிகாரங்கள் மற்றும் பணிகள் போன்றன சட்டவாக்க அடிப்படையில் அமைந்துள்ளன.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் மற்றும் அவற்றில் சேவையாற்றுகின்ற அலுவலர்களுக்கு உதவிச் சட்டங்களையும், சட்டங்களையும்

வரைவு செய்தல், மீளாய்வு செய்தல், தத்துவமுள்ளதாக்கல், அங்கீகரித்தல் போன்றவற்றுக்கான சட்டவாக்க ஆற்றல்கள் மற்றும் வழமையான நடவடிக்கைகள் தொடர்பாக அமுலிலுள்ள சட்டங்களை ஏற்புடையதாக்கிக் கொள்வது தொடர்பான ஆற்றல்கள் பலவீனமான மட்டத்தில் காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்ககளில் பரந்தளவில் காணப்படுகின்ற சட்டரீதியான சிக்கல்கள், முறைகேடுகள், குறைப்பயன்பாடுகள் மற்றும் சட்ட மீறல்களை எதிர்நோக்குவதற்கு காரணமாக அமைகின்ற பிரதான குறைபாடாக இது இனங்காணப்பட்டுள்ளது.

- ஒதுக்கப்பட்ட நிதி - ரூபா 3,000,000.00
- பயன்படுத்திய தொகை - ரூபா 2,402,075.50
- பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் / செயலமர்வுகள் (மாகாண மட்டத்திலான நிகழ்ச்சிகளும் உள்ளடங்களாக) - 30
- உண்மையான பயனாளிகள் - 1372
- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் - 80.07%

குறியீடு	நிகழ்ச்சித்திட்டத்தின் / செயற்பாட்டின் பெயர்	இலக்குக் குழு	கால எல்லை	மாதம்	நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணிக்கை
LD/09/NL/2019/01	வரி மற்றும் வருமானம் திரட்டல்	உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள்	02 நாள்	தெ.மா. சன. ம.மா. சன. சப.மா. சன வ.ம.மா. ஏப். வ.மா. மே ஊ.மா. மே வடமே.மா. யூன் கி.மா. யூலை	9
LD/09/NL/2019/02	துணை விதிகள் ஆக்கம் மற்றும் அமுல்படுத்தல்	உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் விடயம் சம்பந்தப்பட்ட அலுவலர்கள்	02 நாள்	ம.மா. பெப். தெ.மா. மார்ச் கி.மா. மே சப.மா. யூன் மே.மா. யூன் வ.ம.மா. யூலை வ.மா. செப். ஊ.மா. அக். வமே.மா. யூலை	9
LD/09/NL/2019/03	உள்ளூராட்சி சட்டம்	உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் விடயம்	01 நாள்	வ.மே.மா. மார்ச் மே.மா. பெப். ஊ.மா. ஏப். தெ.மா. மே வ.ம.மா. ஆக. சப.மா. ஆக.	09

		சம்பந்தப்பட்ட அலுவலர்கள்		ம.மா. செப். வ.மா. அக். கி.மா. அக்.	
LD/09/NL/2019/04	உள்ளூராட்சி சட்டங்கள் பற்றிய சான்றிதழ் பாடநெறி (கட்டணங்களை அறவிடும் பாடநெறி)	உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அலுவலர்கள்	03 நாள்	மார்ச் முதல் மே வரை	01
LD/09/NL/2019/05	தகவல் அறியும் உரிமை பற்றிய சட்டம் / மாற்று அல்லது கோரிக்கையின் அடிப்படையில் வழங்கக்கூடிய நிகழ்ச்சித்திட்டமாகும்.	உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் உரிய அலுவலர்கள்	01 நாள்	சனவரி – டிசம்பர்	03

இலங்கையின் உபதேசிய மட்டத்திலான அரச நிறுவனங்களுக்கு தெரிவு செய்யப்படுகின்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களின் அரசியலமைப்பு ஆற்றல்களை வலுவூட்டுவதற்காக இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் சட்டம் மற்றும் சட்டவாக்க அலுவல்கள் பிரிவுக்கு தத்துவமளிக்கப்பட்டுள்ளது. நாட்டின் உப தேசிய ஆட்சியமைப்பு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களை உள்ளடக்கியதாக இருப்பதுடன் அவற்றின் நிருவாகம் தொடர்பில் சட்டவாக்கம் மூலம் அந்நிறுவனங்களின் சட்டரீதியான தத்துவம் உரித்தாகியுள்ளது. எனவே மேற்படி நிறுவனங்களின் ஒழுங்கமைப்பு, அமைத்துருவாக்கம், தத்துவங்கள் மற்றும் செயற்பணிகள் சட்டவாக்க அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

துணை விதிகளை வரைவு செய்தல், மீளாய்வு, மதிப்பீடு மற்றும் அங்கீகரித்தல் தொடர்பிலும், அன்றாட நடவடிக்கைகளில் காணப்படுகின்ற சட்டங்களை ஏற்புடையதாக்குவதற்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களிடம் சட்ட ரீதியான திறமைகள் இல்லை என்பது அவதானிப்புச் செய்யப்பட்டுள்ளது. இது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் சட்ட சிக்கல்கள், முறைகேடுகள், முறையற்ற பயன்பாடு மற்றும் சட்டத்தை மீறல்கள் தொடர்பில் தாக்கம் செலுத்தும் பின்னடைவான நிலைமையாக இனங்காணப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகளின் தற்போதைய நிலைமை, பயிற்சித் தேவைகள் மற்றும் அவசியத்தன்மைகளை இனங்கண்டு, மதிப்பீடு செய்த பின்னர் அவை தொடர்பாக பயன்மிக்கவாறு செயற்படும் நோக்கத்துடன் சட்டம் மற்றும் சட்டவாக்க அலுவல்கள் பிரிவின் நிகழ்ச்சித்திட்டங்கள் விசேடமாக திட்டமிடப்பட்டுள்ளன.

அரசியலமைப்பு, துணைவிதிகள், நிருவாகச் சட்டம், நீதிமன்ற நடவடிக்கைமுறை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் நடவடிக்கைகள் போன்றன தொடர்பில் மிகவும் ஆழமாக விளக்கமளித்து நாட்டின் சட்டங்கள் தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்கள் மத்தியில் நிலவுகின்ற அறிவுக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு உதவி வழங்குவதாக இது அமையும். மாகாண சபைகள்

மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் சட்டவாக்க ஆற்றலை வலுவூட்டும் பொதுவான நோக்கம் தொடர்பில் கவனம் செலுத்தி பின்வரும் வியேட குறிக்கோல்களை அடைந்துகொள்வதற்காக இப்பிரிவு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

4.6.6. பயிற்சிப் பிரிவு

- ஒதுக்கப்பட்ட நிதி (ரூ. '000) (தேசிய மற்றும் மாகாண) - ரூபா 7,000,000.00
- பயன்படுத்திய தொகை - ரூபா 6,833,542.17
- பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் / செயலமர்வுகள் (மாகாண மட்டத்திலான நிகழ்ச்சிகளும் உள்ளடங்களாக) - 46
- உண்மையான பயனாளிகள் - 2847
- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் - 97.62%

குறியீடு	நிகழ்ச்சித்திட்டத்தின் / செயற்பாட்டின் பெயர்	இலக்குக் குழு	கால எல்லை	மாதம்	நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணிக்கை
T/01	2017 கல்வி ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக முன்னோக்கி மேற்கொள்ளப்படுகின்ற உள்ளூராட்சி பற்றிய உயர் டிப்ளோமா பாடநெறி - 2017/2018	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் அலுவலர்கள்	08 மாதம்	2019 சனவரி முதல் யூன் வரை	01
T/02	உள்ளூராட்சி பற்றிய உயர் டிப்ளோமா 2019/2020	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள்	01 வருடம்	2019 மே - 2020 யூன்	01
T/03	உள்ளூராட்சி பற்றிய டிப்ளோமா 2019/2020	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் அலுவலர்கள்	01 வருடம்	2019 யூலை – 2020 ஆகஸ்ட்ம	01
T/04	சமுதாய அபிவிருத்தி பற்றிய டிப்ளோமா 2019	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அலுவலர்கள்	01 வருடம்	2019 சனவரி முதல் 2020 யூலை வரை	01

T/05	உள்ளூராட்சி பற்றிய சான்றிதழ் பாடநெறி	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அலுவலர்கள்	03 மாதம்	2019 யூன் முதல் அக்டோபர் வரை	01
T/06	உள்ளூராட்சி பற்றிய உயர் சான்றிதழ் பாடநெறி	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள்	05 மாதம்	2019 யூன் முதல் அக்டோபர் வரை	01
T/07	முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி அலகுகளின் கூட்டம்	உள்ளூராட்சி தொடர்பான சிக்கல்கள்	01 நாள்	காலாண்டு அடிப்படையில்	04 கூட்டம்
T/08	மாகாண பயிற்சி ஒருங்கிணைப்பாளர்களின் கூட்டம்	உள்ளூராட்சி தொடர்பான சிக்கல்கள்	01 நாள்	காலாண்டு அடிப்படையில்	04 கூட்டம்
T/09	புவத் ஹசுன (சிங்களம் /தமிழ்)	உள்ளூராட்சி பற்றிய ஆவணங்கள்	ஒரு காலாண்டுக்கு ஒரு சிக்கல்	காலாண்டு அடிப்படையிலான சிக்கல்கள்	04 சிக்கல்கள்
T/10	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	ரிஎன்ஏ அடிப்படையில் மாகாண சபைகளினால் தெரிவு செய்யப்பட்ட விடயங்கள்	2-3 நாள்	காலாண்டு அடிப்படையிலான சிக்கல்கள்	25 நிகழ்ச்சித்திட்டம்
	மொடியுல் தயார் செய்தல்	உள்ளூராட்சி மன்றங்களுக்கு துணைவிதிகளை ஆக்குதல், வரி மற்றும் வருமான உருவாக்கம், இறுதிக் கணக்குகள், அபிவிருத்தி எண்ணக்கரு, கிராமிய அபிவிருத்தி, அனர்த்த முகாமைத்துவம், உள்ளூராட்சி மன்றங்களின் கடன் முகாமைத்துவம், அரசியலில் பிரவேசித்தல்	ஏற்புடையது அல்ல	ஏற்புடையது அல்ல	ஏற்புடையது அல்ல

மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் மற்றும் அவற்றின் அலுவலர்களின் மனித வள அபிவிருத்திக்காக நிறுவகத்தின் பயிற்சிப் பிரிவினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- பயிற்சித் தேவைகளை மதிப்பீடு செய்தல்
- இலக்குக் குழுக்களை இனங்காணல்

- பயிற்சிக் கையேடுகள், மொடியுல்களைத் தயார் செய்தல்
- பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
- மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், அலுவலர்களுக்கு முக்கியத்துமிக்க துறைகள் தொடர்பான பயிற்சிகளை ஒழுங்கு செய்தல்.

- உள்ளூராட்சி பற்றிய தேசிய மட்டத்திலான டிப்ளோமா /சான்றிதழ் பாடநெறியை நடாத்தல்

<u>2019 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகள்</u>

  - 2018/2019 உள்ளூராட்சி பற்றிய உயர் டிப்ளோமா பாடநெறியை தொடர்ச்சியாக நடாத்தியமை
  - 2019/2020 உள்ளூராட்சி பற்றிய உயர் டிப்ளோமா
  - 2018/2019 சமுதாய அபிவிருத்தி பற்றிய டிப்ளோமா
  - தெரிவு செய்யப்படுகின்ற உறுப்பினர்களுக்கான உள்ளூராட்சி பற்றிய சான்றிதழ் பாடநெறி

- உள்ளூராட்சி பற்றிய தகவல்களைப் பகிர்ந்தளித்தல்
  - மும்மாத செய்திச் சஞ்சிகை (தமிழ்/சிங்களம்)
  - உள்ளூராட்சி ஜெர்னல் ஆவணம் (வருடாந்தம்)

- உள்ளூராட்சி தொடர்பாக இற்றைப்படுத்தப்பட்ட நூலகத்தைத் தாபித்து பேணிவருதல்.

- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான பயிற்சிகளை நடாத்துவதற்காக முகாமைத்துவ அபிவிருத்தி அலகுகள் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களுக்கு உதவி வழங்குவதும், அவற்றை வலுவூட்டுவதும்.

- உள்ளூராட்சி ஆணையாளர்களின் சக்தியை வளர்ப்பதும், அவர்களுக்கு உதவி வழங்குவதும்.

<u>2019ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட கூட்டங்கள்</u>

  - முகாமைத்துவ (அபிவிருத்தி) பயிற்சி அலகுகளின் கூட்டம் - 04
  - ஒருங்கிணைப்பாளர்களின் கூட்டம் - 04

- பிராந்திய மட்டத்தில் முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி அலகுகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், மாகாண சபைகளினால் நடாத்தப்படுகின்ற பயிற்சிகளின் ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு.







4.6.7. சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

உள்ளூராட்சித் துறையில் விசேட கவனம் செலுத்தப்படுகின்ற விடயமொன்றாக கழிவுப்பொருள் முகாமைத்துவம் மற்றும் சுற்றாடல் முகாமைத்துவம் காணப்படுகின்றன. இதற்காக ஒதுக்கப்பட்டதொது பிரிவு இல்லாமை காரணமாக நிறுவனத்தினால் போதியளவு உள்ளூராட்சித் துறையின் கழிவுப்பொருள் முகாமைத்துவம் மற்றும் சுற்றாடல் முகாமைத்துவத்துக்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது இடம்பெற்றிருக்கவில்லை. எனவே, இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்காக "சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் கழிவுப்பொருள் முகாமைத்துவப் பிரிவு" என்ற பெயரில் புதிய பிரிவொன்று 2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அமுல்படுத்த திட்டமிடப்பட்டது. பரீட்சார்த்தமாக இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் நாடு முழுவதிலும் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் 07 ஐ அமுல்படுத்தியது. இதற்கு உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்து சாதகமான வரவேட்புக் கிடைத்ததன் காரணமாக நிருவாக சபையிடம் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டது.

- ஒதுக்கப்பட்ட நிதி (ரூ. '000) (தேசிய மற்றும் மாகாண) - ரூபா 420,000.00
- பயன்படுத்திய தொகை - ரூபா 333,056.78
- பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் / செயலமர்வுகள் (மாகாண மட்டத்திலான நிகழ்ச்சிகளும் உள்ளடங்களாக) - 7
- உண்மையான பயனாளிகள் - 274
- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் - 79.29%



திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் - மேல் மாகாணம்



திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் - சபறகமுவா மாகாணம்



திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் - மத்திய மாகாணம்

4.6.8. இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் திறன் விருத்தி

கடந்த பத்தொன்பது (19) வருட காலப்பகுதிக்குள் பல்வேறு முக்கிய திருப்புமுனைகளையும் கடந்து வந்துள்ள இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் இதுவரை அடைந்துகொண்டுள்ள செயலாற்றுகையின் பயணப் பாதை பற்றி பின்னாய்வு செய்து அவற்றிலுள்ள விசேடமான நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பணிக்கு வழிகாட்டுவதற்கு மேற்படி முயற்சிகளின் பெறுபேறுகளைப் பயன்படுத்துவது முக்கியமானதாகும். மேலும் குறித்த இலக்குகள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிறுவகம் ஏற்படுத்தியுள்ள அழுத்தங்கள் மற்றும் வழிகாட்டல்கள் யாவை என்பது பற்றி மதிப்பீடு செய்வதும் அவசியமானதாகும். தனிமைப்படாது நிறுவனத்தின் செயற்பணிகளை நிறைவேற்றுவதற்கு இதன் போது எதிர்பார்க்கப்பட்டது.

- ஒதுக்கப்பட்ட நிதி (ரூ. '000) - ரூபா 3,200,000.00
- பயன்படுத்திய தொகை(ரூ. '000) - ரூபா 1,549,983.33
- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் - 67.77%

நிறுவனத்திற்கு வெளியேயான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம்







புத்தாண்டுக் கொண்டாட்டம்





4.6.9. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் ஆகிய இரண்டு துறைகளையும் வலுவூட்டுவதற்காக கொள்கை வகுப்பாளர்களுக்குத் தேவையான தகவல்கள், பெறுபேறுகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகள் மற்றும் ஆய்வுகள் மூலம் உள்ளூராட்சி மன்றங்களுக்கும், மாகாண சபைகளுக்கும் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் ஆராய்ச்சிப் பிரிவு பிரதானமாக கவனம் செலுத்துகின்றது. அத்துடன் தமது ஆராய்ச்சிகளின் மூலம் கண்டுபிடிக்கப்படுகின்ற விடயங்களின் அடிப்படையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏற்புடைய நடவடிக்கைகளிலும் இப்பிரிவு ஈடுபட்டு வருகின்றது.

- ஒதுக்கப்பட்ட நிதி (ரூ. '000) - ரூபா 6,000,000.00
- பயன்படுத்திய தொகை (ரூ. '000) - ரூபா 2,308,453.50
- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் - 38.47%

குறிக்கோள்கள் :

- ❖ உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகளின் திறனை விருத்தி செய்வதற்காக மேற்படி நிறுவனங்கள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் பொறுப்பை ஏற்றுச் செயற்படுதல், அந்நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் மேம்படுத்தல்.
- ❖ கொள்கை வகுக்கும் செயன்முறையில் பயன்படுத்துவதற்காக, மேற்படி ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களை சம்பந்தப்பட்ட கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அமுல்படுத்தும் நிறுவனங்களுக்கு மத்தியில் பகிர்ந்தளித்தல்.
- ❖ புதிய ஆராய்ச்சி முன்னெடுப்புகளுக்கு முக்கியமான துறைகளை வெளிப்படுத்திக் கொள்ளல்.
- ❖ ஆராய்ச்சிப் பெறுபேறுகளை ஆவணமயப்படுத்தல்.
- ❖ உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் தொடர்பிலான ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்களை வெளியிடுதல்.
- ❖ நிருவாகம் தொடர்பாக தேசிய மட்ட மற்றும் சர்வதேச மட்டத்திலான ஆராய்ச்சி நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணிவருதல்.
- ❖ புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வது அவசியமாகவுள்ள முக்கிய பிரிவுகளை இனங்காணல்.
- ❖ மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான தரவுக் கட்டமைப்பைப் பேணிவருதல் மற்றும் நேர்வரிசை அமைச்சுடன் தொடர்புகளைப் பேணுதல்.
- ❖ உள்ளூராட்சி, மாகாண சபைகள் தொடர்பான ஆவணங்களை வெளியிடல்.
- ❖ ஆராய்ச்சி கலாசாரத்தை மேம்படுத்துவதற்காக தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபை துறைகளில் ஏற்புடைய அலுவலர்களுக்கு ஆராய்ச்சி முறையியல் பற்றிய பாடநெறி / செயலமர்வுகளை நடாத்தல்.

- ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்படுகின்ற விடயங்களின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் மற்றும் அவற்றில் சேவையாற்றுகின்ற அலுவலர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

ஆராச்சிக் கற்கை – 2019 ஆம் ஆண்டு

* உள்ளூராட்சி மன்றங்கள் எதிர்கொள்ளும் மனிதவள முகாமைத்துவம் பற்றிய சிக்கல்கள் பற்றிய ஆராய்ச்சிக் கற்கை மற்றும் எதிர்கால தடைகள்

** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையிலான தொடர்புகள் ஆய்வுக் கற்கை







4.6.9. தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப பிரிவு

இணையத்தளம், உள்ளக வலையமைப்பு, தரவு முறைமை மற்றும் கணினிகளின் வன்பொருள் மற்றும் மென்பொருள் முகாமைத்துவத்துக்கு பொறுப்புக்கூறுகின்ற தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பப் பிரிவு, உள்ளூராட்சி மன்றங்களின் பதவியணியை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளும் மறுசீரமைப்புசார்ந்த தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப பயிற்சிகளிலும் ஈடுபடுகின்றது.



பணிகள்

- நிறுவனத்தின் மற்றும் உள்ளூராட்சித் துறையின் பதவியணியினருக்கு ஈமேல் மற்றும் இணையத்தள வசதிகளை வழங்குதல்.
- இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் இணையத்தளத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் பேணிவருதல்
- நிறுவனத்தின் கணினி மற்றும் LAN வலையமைப்பைப் பேணிவருதல்
- தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்கு உள்ளூராட்சி மன்ற பதவியணியினரை பயிற்றுவித்தல்.
- ஈமேல் மற்றும் இணையத்தளம் ஊடாக உத்தியோகபூர்வ தகவல்களை விநியோகித்தல்.
- அமைச்சுக்கு மற்றும் நிறுவனங்களுக்கு தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

- ஒதுக்கப்பட்ட நிதி (ரூ. '000) - ரூபா 3,200,000.00
- பயன்படுத்திய தொகை (ரூ. '000) - ரூபா 2,168,532.60
- பூர்த்தி செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் / செயலமர்வுகளின்

  எண்ணிக்கை (மாகாண மட்ட நிகழ்ச்சிகள் உட்பட) - 38
- உண்மையான பயனாளிகள் - 1785
- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் - 67.77%

4.7 இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பொறுப்பளிக்கப்பட்டவை / கருத்திட்டங்கள் மற்றும் மதியுரைச் சேவைகள் - 2019 ஆம் ஆண்டு

UN-HABITAT நிறுவனத்தின் அனுசரணை கிடைக்கின்ற இலங்கையின் நகரங்களின் நிலைமை பற்றிய கருத்திட்டம்

2018 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்ட இலங்கையின் நகரங்களின் நிலைமை பற்றிய அறிக்கை மூலம் நாடு முழுவதிலும் நகரமயமாக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் நகரமயமாக்கலின் மட்டம் தொடர்பிலான சீரான தகவல்கள் பற்றிய பகுப்பாய்வு வழங்கப்படுகின்றது. இங்கு நகரங்களை அடிப்படையிலான அளவுரீதியான மற்றும் தரமான தரவுகள் உள்ளடங்குவதுடன், இலங்கையின் பிரதான தேசிய, மாகாண மற்றும் மாநகர சபை அதிகாரப் பிரதேசங்களின் விசேட பகுப்பாய்வும் மேற்கொள்ளப்படுகின்றது.

இதன் விசேட குறிக்கோளாக இருப்பது, முதற் தடவையாக தகவல்களை அறிவிக்கின்ற மற்றும் சான்றுகளின் அடிப்படையிலான கொள்கைகள் மற்றும் இணைந்த நகரத் திட்டமிடல் மற்றும் தனியார் மற்றும் அரச முதலீடு தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதாகும்.

அதற்கமைய, இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் SOSLCP தொடர்பில் நகர மட்டங்களின் தரவு முறை பற்றி அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் பொழிப்பு அறிக்கை பின்வருமாறாகும்.

தொடர் இல.	திகதி	நகரம்	பங்கேற்ற எண்ணிக்கை	பங்கேட்பு
1	21.01.2019	குருநாகல் மாநகர சபை	27	மாநகர முதல்வர், ஆணையாளர், மாநகர சபை பதவியணியினர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள்
2	22.01.2019	திருகோமணலை நகர சபை	34	செயலாளர், நகர சபை பதவியணியினர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள்
3	24.01.2019	கண்டி மாநகர சபை	29	செயலாளர், மாநகர சபை பதவியணியினர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள்
4	25.01.2019	யாழ்ப்பாணம் மாநகர சபை	31	பிரதி ஆணையாளர், மாநகர சபை பதவியணியினர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள்
5	28.01.2019	இரத்தினபுரி மாநகர சபை	30	மாநகர முதல்வர், மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை பதவியணியினர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள்
6	31.02.2019	அநுராதபுரம் மாநகர சபை	34	மாநகர முதல்வர், மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை பதவியணியினர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள்
7	28.02.2019	காலி மாநகர சபை	31	மாநகர முதல்வர், மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை பதவியணியினர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள்
8	08.02.2019	பதுளை மாநகர சபை	30	மாநகர முதல்வர், மாநகர சபை உறுப்பினர்கள் ஆணையாளர், மாநகர சபை பதவியணியினர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள்
9	12.02.2019	கொழும்பு மாநகர சபை	20	மாநகர ஆணையாளர், மாநகர சபை பதவியணியினர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள்
10	15.02.2019	கோட்டே மாநகர சபை	35	மாநகர முதல்வர், ஆணையாளர், மாநகர சபை பதவியணியினர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள்
11	22.02.2019	தெஹிவளை கல்கிசை மாநகர சபை	36	மாநகர ஆணையாளர், மாநகர சபை பதவியணியினர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள்

5.1 கணக்காய்வு அபிப்பிராயம்

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. டபிள்யுஎன்பீ2/சீபி/எச் எஸ்எல்ஜஎல்ஜி/எவ்ஏ/2019

திகதி : 2020 யூலை 22 ஆம் திகதி

தலைவர்,
இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம்.

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. **நிதிக் கூற்றுக்கள்**

1.1 முனைப்பளியுள்ள அபிப்பிராயம்

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுஇ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கு அமைய நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்று நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கு அமைய எனது அறிக்கை எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பளியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகவுள்ள பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனகத்தின் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகைக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியன இலங்கை அரசதுறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய உண்மையாக மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பளியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) நிதி நிலைமைக் கூற்றின் உரிமையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 2,601,484 ஆன கூட்டுத்தொகையான கொடை தொடர்பிலான சொத்துக்களை இனங்கண்டு கடனழிப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், கட்டிடம், நூலக புத்தகங்களுக்கு ரூபா 218,774 மிகையாக தேய்மானம் கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ) நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த ரூ. 506,057,702 ஆன அரச மூலதனக் கொடை தொடர்பில் பின்பற்றப்படுகின்ற கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 09 இன் 15 ஆம் பந்திக்கு அமைய செலவினம் அல்லது தேறிய மாற்றப்படாத பெறுமதி ஆகிய இரண்டில் மிகவும் குறைவான பெறுமதிக்கு இருப்பு மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டுமாயினும் நிறுவனத்தின் இருப்புக்களில் உள்ளடங்குகின்ற ரூபா 1,517,202 ஆன காலம் கடந்த வெளியீட்டு இருப்புக்களின் தேறிய மாற்றப்படாத பெறுமதியை கணிப்பீடு செய்யாது அதன் செலவினம் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது.

(உ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 02 இற்கு அமைய ரூ. 522,436 ஆன வட்டி வருமானம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசோட்டத்தை கணிப்பீடு செய்யும் போது நீக்கப்பட வேண்டிய அம்சமாயினும், செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம் குறைக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், ஆண்டினுல் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூ. 16,000,000 ஆன தொகை காசோட்டக் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி.) அமைய எனது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வது தொடர்பிலான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பளியுள்ள அபிப்பிராயத்திற்கு அடிப்படையைப் பெற்றுக் கொடுப்பதற்காக நான் பெற்றுக் கொண்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் மற்றும் பொருத்தமானதுமாகும் என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவம் மற்றும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகத் தயார் செய்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு முடியுமானதாகும் வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் போது, நிறுவனத்தினை தொடர்ச்சியாக பேணிவருவதற்கான ஆற்றலைத் தீர்மானம் செய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்பதுடன், முகாமைத்துவம் நிறுவனத்தை முடிவுறுத்த எதிர்பார்க்குமாயின் அல்லது வேறு மாற்றுவழிமுறைகள் இல்லாத பட்சத்தில் செயற்பாட்டை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாயின் அன்றி தொடர்ச்சியான நிலைத்திருத்தலின் அடிப்படையில் கணக்குக் பதிவு மற்றும் நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் தொடர்பில் ஏற்புடையதான விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவனத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்பை, கட்டுப்படுத்தும் தரப்பினர் கொண்டிருப்பார்கள்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உட்பிரிவுக்கு அமைய, நிறுவனத்தின் வருடாந்த மற்றும் கால அடிப்படையிலான நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யக்கூடியவாறு தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் முறையாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணிவருதல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு)

பொதுவாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான

கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கட்டுப்படுத்தும் தரப்பினர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள்.

2. **வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பிலான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய எனது அறிக்கையில் முனைப்பளியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்கள் மற்றும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் என்பதுடன், எனது பரிசோதனைகளின் போது தெரியவந்துள்ளவாறு முறையான நிதி அறிக்கைகளை நிறுவனம் பேணிவந்துள்ளது.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய நிறுவனம் சமர்ப்பித்துள்ள நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்திசைகின்றன.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (IV) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கடந்த ஆண்டு நான் மேற்கொண்ட சிபாரிசுகள், சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்குகின்றன.

பின்பற்றப்பட்ட நடவடிக்கைமுறை மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் போதியளவிலான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்படுவதன் அடிப்படையில், பின்வரும் கூற்றுக்களை வெளியிடுமளவுக்கு எதனையும் நான் அவதானிப்புச் செய்யவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய நிறுவனம் சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது வேறு வகையில் சாதாரண வியாபார நிலைமைக்கு புறம்பாக தொடர்பு உள்ளமை.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து வேறு பொதுவான அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்கியொழுகாதவாறு செயற்பட்டுள்ளமை.

(அ)	2014 பெப்ருவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி	செயற்றிட்டமானது வருடாந்த வரவு செலவுத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமைகளின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 15.1 (IX) மற்றும் நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறையின் 4 ஆம் பிரிவு	உரிய திகதியில் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை நடாத்தப்படாமை காரணமாக அலுவலர்கள் 35 பேரைத் தரப்படுத்தல் மற்றும் பதவி உயர்வு வழங்குவது முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(இ)	பெறுகை வழிகாட்டல் தொகுப்பின் 8.9.3 (அ)	பெறுகை வழிகாட்டல் தொகுப்பின் நோக்கங்களுக்கு முரணாக ரூ. 742,288 ஆன பெறுமதிக்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த CCTV கமரா கட்டமைப்பு தொடர்பில் இரு தரப்பினர்களுக்கும் இடையே உடன்படிக்கையொன்று செய்துகொள்ளப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய நிறுவனத்தின் தத்துவங்கள், பணிகள் மற்றும் செயற்பணிகளுக்கு ஏற்புடையதாகாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய நிறுவனத்தின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறன்மிக்கவாறும், விளைதிறன்மிக்கவாறும் உரிய காலப்பகுதிகளுக்குள் குறித்த சட்டங்கள் விதிகளுக்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்தியிருக்கவில்லை என்பது.

நிறுவனத்திற்கு 4 மாடிகளைக் கொண்ட கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2013 ஆம் ஆண்டு விலை மனுக்கள் கோரப்பட்டு ஒப்பந்ததாரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு ரூ. 53,196,907 ஆன ஒப்பந்த உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருந்ததுடன், கட்டிடத்தின் ஆழ்துளையிடல் அடிக்கல் நாட்டுவதற்காக பிரதான ஒப்பந்ததாரரினால் உப ஒப்பந்ததாரர் ஒருவரிடம் கையளிக்கப்பட்டிருந்தது. இந்த 04 மாடிகளைக் கொண்ட கட்டிடத்தை 8 மாடிகளாக அதிகரிப்பதற்கு 2013 நவம்பர் மாதம் 04 ஆம் திகதி நிறுவனத்தின் முகாமைத்துவக் குழு தீர்மானம் மேற்கொண்டு பிரதான ஒப்பந்ததாரருக்கு எழுத்து மூலம் அறிவிப்புச் செய்துள்ள போதிலும், அது தொடர்பில் பிரதான ஒப்பந்ததாரர் உப ஒப்பந்ததாரருக்கு அறிவிப்புச் செய்யாமை காரணமாக 4 மாடிகளுக்கு மாத்திரம் போதியளவில் ஆழ்துளையிடல் அடிக்கல் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மேலும், இந்த அடிக்கல் மீது கட்டிடத்தை நிர்மாணிப்பது உகந்தது அல்ல என்பதை நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளதனால் இதற்காக தாங்கிக் கொள்ளப்பட்ட ரூ. 44,757,072 ஆன செலவினம் பயனற்ற செலவினமாக மாறியுள்ளது.

3. **ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்**

(அ) நிறுவனத்தினால் 2015 ஆம் ஆண்டு அச்சிடப்பட்ட தினக்குறிப்புக்களுக்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் கிடைக்க வேண்டிய ரூ. 492,000 ஆன தொகை மீளாய்வு ஆண்டில் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) சேவை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் பதவி விலகிய அலுலவர்கள் 14 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள கூட்டுத்தொகையான ரூ. 1,272,582 ஆன கடன் நிலுவை மற்றும் உயிரிழந்துள்ள அலுவலர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள ரூ. 805,860 ஆன கடன் நிலுவை தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க செயற்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வு ஆண்டில் திறைசேரியினால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த மீண்டெழும் ஏற்பாடுகள் ரூ. 50,000,000 மற்றும் பயிற்சியளித்தல் செலவினம் உள்ளடங்களாக மூலதன ஏற்பாடுகள் ரூ. 75,000,000 இல் ரூ. 62,335,000 அதாவது 50 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிறுவனத்தின் ஒட்டுமொத்த பதவியணியினருக்கும் முறையானவாறு கடமைகளைப் பொறுப்பளிக்கின்ற கடிதங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், பதவியணியை மறுசீரமைத்தல் மூலம் ஏற்படுத்தப்பட்ட புதிய பதவிகளுக்கு பதவியணியினரை இணைப்புச் செய்து கொள்வதற்கு மற்றும் ஆட்சேர்ப்புச் செய்துகொள்வது தொடர்பில் ஏற்புடையதாகின்ற ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையை திருத்தம் செய்யும் நடவடிக்கைகள் இந்த அறிக்கையின் திகதி வரையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) நிலைபேறான அபிவிருத்தி பற்றிய ஐக்கிய நாடுகளின் ஆண்டு '2030 நிகழ்ச்சிநிரல்' இற்கமைய இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் விழிப்புணர்வூட்டப்பட்டிருக்காமை காரணமாக அதன் பணிகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் மேற்படி இலக்குகளை அடைந்துகொள்ள வேண்டிய திருப்புமுனைகளும் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதை மதிப்பீடு செய்வதற்கான சுட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ஒப்பம் / டபிள்யு.பீ.சி. விக்ரமரத்ன,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

5.2. அ) நிதிச் செயலாற்றுகைக் கூற்று

உள்ளடக்கம்

2019.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

2019.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை பற்றிய கூற்று

2019.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான காசோட்டம் பற்றிய கூற்று

2019.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான தேறிய சொத்து மாற்றம் பற்றிய கூற்று

கணக்கீட்டுக் குறிப்புகள்

கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்னிணைப்பு

இலங்கை உள்ளூர் ஆளுகை நிருவகத்தின்

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான

நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

	குறிப்பு	***31/12/2019***	***31/12/2018***
செயற்பாட்டு வருமானம்			
அரசாங்கத்தின் பங்களிப்பு	*01*	*62,665,000.00*	*55,449,000.00*
டிப்ளோமா பாடநெறி வருமானம்	*02*	*5,043,700.00*	*3,602,500.00*
சான்றிதழ் பாடநெறி வருமானம்	*03*	*954,600.00*	*4,029,975.00*
விசேட கருத்திட்டங்கள் வருமானம்	*04*	*4,836,363.25*	*12,644,553.73*
ஏனைய வருமானம்	*05*	*1,374,723.64*	*1,234,221.36*
மொத்த செயற்பாட்டு வருமானம்		***74,874,386.89***	***76,960,250.09***
செயற்பாட்டு செலவினம்			
நிருவாக மற்றும் தாபனச் செலவினம்	*06*	*38,164,837.42*	*36,157,098.77*
மனிதவள அபிவிருத்திச் செலவினம்	*07*	*26,092,138.54*	*20,862,230.68*
டிப்ளோமா பாடநெறிச் செலவினம்	*08*	*1,302,763.50*	*2,660,238.94*
சான்றிதழ் பாடநெறி செலவினம்	*09*	*285,137.43*	*1,041,691.06*
விசேட கருத்திட்டங்களின் செலவினம்	*10*	*4,057,385.71*	*8,297,183.28*
ஓய்வுப் பயன்களுக்கான கடப்பாடுகள் மற்றும் தேய்மானம்	*11*	*5,925,713.86*	*5,105,321.45*
மொத்த செயற்பாட்டுச் செலவினம்		***75,827,976.46***	***74,123,764.18***
ஆண்டுக்கான மிகை / (குறை)		***(953,589.57)***	***2,836,485.91***

இலங்கை உள்ளூர் ஆளுகை நிருவகத்தின்

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	***31/12/2019***	***31/12/2018***
சொத்துக்கள்			
நடைமுறையல்லா சொத்துக்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	*12*	*442,999,229.96*	*422,412,676.99*
		442,999,229.96	***422,412,676.99***
செயற்படு மூலதனம்			
கட்டிட நிர்மாணிப்பு	*13*	***45,357,072.25***	***45,357,072.25***
நடைமுறை சொத்துக்கள்			
இருப்பு	*14*	*1,697,796.75*	*1,787,169.45*
முற்பணம் செலுத்தல்களும் கிடைக்க வேண்டியவையும்	*15*	*842,599.32*	*835,563.71*
கடன்பட்டோரும் முற்பணமும்	*16*	*11,734,959.20*	*11,246,982.40*
காசும், காசுக்கு சமமானவையும்	*17*	*32,341,070.76*	*32,313,815.11*
		46,616,426.03	***46,183,530.67***
மொத்த சொத்துக்கள்		***534,972,728.24***	***513,953,279.91***
உரிமையாண்மையும் பொறுப்புக்களும்			
அரசாங்கத்தின் பங்களிப்பு - மூலதனம்		*506,057,701.96*	*508,434,195.41*
திரண்ட நிதி		*(11,255,925.83)*	*(13,642,053.61)*
ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியக் கொடை		*714,658.79*	*714,658.79*
கருத்திட்ட பங்களிப்பு - மூலதனம்		*1,595,824.75*	*1,595,824.75*
ஆசிய மன்றத்தின் கொடை		*291,000.00*	*291,000.00*
நெல்சிப் கொடை		*1,034,834.88*	*1,400,069.88*
மா.ச., உள். அமைச்சின் கொடை		*257,302.50*	-
மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கம்		*24,618,619.33*	-
		523,314,016.38	***498,793,695.22***
நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்			
ஓய்வூதியப் பயன்களுக்கான கடப்பாடுகள்	*18*	*7,433,048.50*	*7,645,407.50*
தடுத்து வைக்கப்பட்டுள்ள நிதி		*1,512,000.00*	*1,512,000.00*
		8,945,048.50	***9,157,407.50***
நடைமுறை பொறுப்புக்கள்			
ஒதுக்கம் - கணக்காய்வுக் கட்டணம்		*700,000.00*	*350,000.00*
கடன் கொடுத்தோரும் நின்ற செலவினமும்	*19*	*2,013,663.36*	*5,652,177.19*
		2,713,663.36	***6,002,177.19***
மொத்த சொத்துக்களும், பொறுப்புக்களும்		***534,972,728.24***	***513,953,279.91***

5 ஆம் பக்கம் முதல் 15 ஆம் பக்கம் வரை தரப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒரு பகுதியை வெளிப்படுத்துகின்றன. இந்த நிதிக்கூற்றுக்கள் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு இலங்கை உள்ளூர் ஆளுகை நிருவகத்தின் நடவடிக்கைகள் பற்றிய நிலைமை மற்றும் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான அதன் மிகை / (குறை) பற்றிய உண்மையான மற்றும் நியாயமான கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன.

…….. …….

ஜயந்த லியனகே – சட்டத்தரணி
பணிப்பாளர் / பி.நி.அ.

திரு பீ.ஏ.டி. ஹிரான் ரதிஷ
கணக்கீட்டு அலுவலர் /
உதவிப் பணிப்பாளர் (நிதி) பதில்

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின்

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான

காசுப் பாய்ச்சல் கூற்று

			31/12/2019
பொதுவான நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த மிகை/(குறை)			***(953,589.57)***
காசல்லாத மாற்றங்களின் சீராக்கல்			
தேய்மானம்	*4,332,804.36*		
பணிக்கொடைக்கான ஏற்பாடு	*1,242,909.50*		
கணக்காய்வுக் கட்டணத்துக்கான ஏற்பாடு	*350,000.00*		
வருமான வரி செலுத்தல்	*(460,669.00)*		
இருப்பு /கடன்பட்டோர் / ஏனைய கிடைக்க வேண்டியவைகளில் அதிகரிப்பு	*(405,639.71)*		
கடன்கொடுத்தோர் மற்றும் செலுத்த வேண்டியவைகளில் குறைவு	*(3,254,817.59)*		
பங்களிப்பு வருமானத்தில் சீராக்கல்	*(380,932.50)*		
பணிக்கொடை செலுத்தல்	*(331,510.60)*		
முன்னைய ஆண்டுக்கான சீராக்கல்கள்	*27,134.00*		
			1,119,278.46
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசோட்டம் ***(1)***			***165,688.89***
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம்			
நடைமுறையல்லா சொத்துக் கொள்வனவு	*(660,869.69)*		
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசோட்டம் ***(2)***			***(660,869.69)***
நிதிச் செயற்பாடுகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்			
சேமிப்புக் கணக்கு மீதான வட்டி வருமானம்	*239,367.96*		
நிலையான வைப்புக் கணக்கு மீதான வட்டி வருமானம்	*283,068.49*		
நிதிச் செயற்பாடுகளில் இருந்தான தேறிய காசு ***(3)***			***522,436.45***
ஆண்டினுள் தேறிய மாற்றம் ***(1) + (2) + (3)***			***27,255.65***
காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவையும்			***32,313,815.11***
காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும்		குறிப்பு ***'A'***	***32,341,070.76***

குறிப்பு ***'A'***

இலங்கை வங்கிக் கணக்கு இல. *2323344*	*11,539,589.39*
இலங்கை வங்கிக் கணக்கு இல. *2323350*	*1,092,871.09*
சேமிக்குக் கணக்கு - இலங்கை வங்கி, கணக்கு இல. *2329975*	*3,708,610.28*
நிலையான வைப்புக்கள் - இலங்கை வங்கி	*16,000,000.00*
	32,341,070.76

இலங்கை உள்ளூர் ஆளுகை நிருவகத்தின்
2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான
தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் பற்றிய கூற்று

விபரம்	அரசாங்கத்தின் பங்களிப்பு மூலதனம்	திரட்டிய நிதி	ஐ.நா. அபிவிருத்தி நிதியத்தின் கொடை	கருத்திட்ட பங்களிப்பு - மூலதனம்	ஆசிய மன்றக் கொடை	நெல்சிப் கொடை	மா.ச., உள். அமைச்சின் கொடை	மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	மொத்தம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
2019.01.01 ஆம் திகதியில் மீதி	***508,434,195.41***	***(13,642,053.61)***	***714,658.79***	***1,595,824.75***	***291,000.00***	***1,400,069.88***	***273,000.00***	***24,618,619.33***	***523,685,314.55***
காலப் பகுதிக்கான மிகை /குறை	-	*(953,589.57)*	-	-	-	-	-	-	***(953,589.57)***
காலப் பகுதிக்கான மாற்றல்கள்	*(2,376,493.45)*	-	-	-	-	***(365,235.00)***	***(15,697.50)***	-	***(2,757,425.95)***
முன்னைய ஆண்டுக்கான சீராக்கல்கள் (குறிப்பு ஏ)	-	***3,339,717.35***	-	-	-	-	-	-	***3,339,717.35***
2019.12.31 ஆம் திகதியில் மீதி	***506,057,701.96***	***(11,255,925.83)***	***714,658.79***	***1,595,824.75***	***291,000.00***	***1,034,834.88***	***257,302.50***	***24,618,619.33***	***23,314,016.38***

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின்

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான கணக்குகளுக்கான குறிப்புகள்

		31/12/2018
குறிப்பு – 01 அரசாங்க பங்களிப்பு		
2100 - 02	திறைசேரி – மீண்டெழுவன	*34,499,000.00*
2101 - 03	திறைசேரி – மூலதனம்	*20,950,000.00*
	மொத்தம்	***55,449,000.00***
குறிப்பு - 02 டிப்ளோமா பாடநெறிக் கட்டண வருமானம்		
2101-01-07-01	*உள்ளூர் ஆளுகை பற்றிய உயர் டிப்ளோமா பாடநெறி 2016/17*	*310,000.00*
2101-01-07-02	*உள்ளூர் ஆளுகை பற்றிய உயர் டிப்ளோமா பாடநெறி 2017/18*	*2,037,500.00*
2101-01-07-03	*சமுதாய அபிவிருத்தி பற்றிய டிப்ளோமா பாடநெறி 2017/18*	*1,255,000.00*
2101-01-07-04	*உள்ளூர் ஆளுகை பற்றிய டிப்ளோமா பாடநெறி 2019/2020 (தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு)*	-
2101-01-07-05	*உள்ளூர் ஆளுகை பற்றிய டிப்ளோமா பாடநெறி 2019/2020 (அலுவலர்களுக்கு)*	-
	மொத்தம்	***3,602,500.00***
குறிப்பு - 03 சான்றிதழ் பாடநெறிக் கட்டண வருமானம்		
2101-02-09-01	*ஆராய்ச்சி முறையியல் பற்றிய சான்றிதழ் பாடநெறி 2017*	*20,000.00*
2101-02-09-02	*உள்ளூராட்சி சட்டம் பற்றிய சான்றிதழ் பாடநெறி 2018*	*625,000.00*
2101-02-09-03	*கணினி பிரயோகம் (எப்லிகேசன்ஸ்) பற்றிய சான்றிதழ் பாடநெறி 2018*	*565,000.00*
2101-02-09-04	*ஆராய்ச்சி முறையியல் பற்றிய சான்றிதழ் பாடநெறி 2018*	*570,000.00*
2101-02-09-05	*உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான சான்றிதழ் பாடநெறி 2018*	*2,249,975.00*
2101-02-09-06	*கருத்திட்ட முகாமைத்துவம் பற்றிய சான்றிதழ் பாடநெறி 2019*	-
2101-02-09-07	*கணினி பிரயோகம் (எப்லிகேசன்ஸ்) பற்றிய சான்றிதழ் பாடநெறி 2019*	-
	மொத்தம்	***4,029,975.00***
குறிப்பு - 04 விசேட கருத்திட்ட வருமானம்		
2101-05	*UNDP தூதுக் குழுவினர் விஜயம்*	*511,435.60*
2101-06	*Chrysalis RtM கருத்திட்டம்*	*4,015,733.71*
2101-08	*UNHABITAT SLC கருத்திட்டம்*	*2,610,106.93*
2101-09	*உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய கணக்கீட்டு முறைமை UNDP*	*3,392,277.49*
2101-10	*தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை பயிற்றுவிப்பதை ஒருங்கிணைப்புச் செய்தல்*	*750,000.00*
2101-11	*மொடியுல் தயார் செய்வதன் மூலமான வருமானம்*	*1,365,000.00*
	மொத்தம்	***12,644,553.73***
குறிப்பு – 05 ஏனைய வருமானம்		
1505 - 01	*நானாவித வருமானம்*	*67,066.18*
1505 - 02	*பதவியணி கடன் மீதான வட்டி*	*376,087.30*
1505 - 03	*வெளியீடுகளை விற்பனை செய்தல்*	*68,135.00*
1505 - 05	*சேமிப்புக் கணக்கு மீதான வட்டி*	*356,817.08*
1505 - 06	*ஊழியர் முற்பணம் மீதான வட்டி*	*880.80*
1505 - 07	*நிலையான வைப்பு மீதான வட்டி*	-
1505 - 08	*வருமான பங்களிப்பு*	*365,235.00*
	மொத்தம்	***1,234,221.36***

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின்
2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான
கணக்குகளுக்கான குறிப்புகள்
இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின்

		31/12/2019	***31/12/2018***
குறிப்பு – 06 நிருவாக மற்றும் தாபன செலவினங்கள்			
	ஆளுக்குரிய வேதனாதிகள்		
1503 - 01 - 01	சம்பளமும் வேதனமும்	*14,784,926.15*	*13,794,877.59*
1503 - 01 - 02	ஊழியர் சேமலாப நிதியம்	*2,756,955.66*	*2,182,386.92*
1503 - 01 - 03	ஊழியர் நம்பிக்கை நிதியம்	*558,903.71*	*545,596.81*
1503 - 01 - 04	விடுமுறை தின கொடுப்பனவும், மேலதிக நேரமும்	*1,149,600.33*	*881,270.67*
1503 - 01 - 05	வேறு கொடுப்பனவுகள்	*5,236,000.41*	*6,295,151.73*
	பிரயாண செலவினம்		
1503-02-01	பிரயாண செலவினம் - உள்நாடு	*382,310.56*	*377,481.11*
1503-02-02	பிரயாண செலவினம் - வெளிநாடு	*50,992.22*	*38,648.00*
	வழங்கல்கள்		
1503 - 03 - 01	எழுது கருவி	*1,668,638.13*	*1,251,852.99*
1503 - 03 - 02	எரிபொருளும் உராய்வு நீக்கிகளும்	*1,585,943.90*	*1,456,240.13*
1503 - 03 - 03	சீருடை	*36,000.00*	*36,000.00*
	பராமரிப்புச் செலவினம்		
1503 - 04 - 01	வாகனம்	*2,902,026.68*	*2,567,788.88*
1503 - 04 - 02	பொறி இயந்திர சாதனம், உபகரணம்	*561,173.88*	*433,782.72*
1503 - 04 - 03	கட்டிடம்	*1,081,600.51*	*1,713,829.70*
1504 - 04 - 04	கணினிக்கூட பராமரிப்பு	-	*519,663.75*
	ஒப்பந்த செவைகள்		
